(4) பமுணுகமை (5) பிலியந்தலை (.......)

28. இலங்கையில் முதலாவது சிங்கள 'நாடகம்' வான 'அஹலேபொல'நாடகமவை தயார்த்தவர்

(1) பிலிப்பு சிஞ்சோ (2) சாள்ஸ் டயஸ் (3) பீற்றர் டி சில்வா

(4) E.F.C. லுடோவைக் (5) திஸ்ஸ காரியவசம் (......)

29. திருக்குற்றாலக் குறவஞ்சியில் கடவுள் வணக்கத்திலே விநாயகர் வணக்கத்தின் பின் பாடப்படும் கடவுள்

(1) திரிகூடாநாதர் (2) குழல்வாய் மொழியம்மை (3) திருமால்

(4) முருகக் கடவுள் (5) கலைமகள் (......)

30. அபசுரம் நாடகத்தில் வரும் உரையாடலைக் கவனித்து கீழ்வரும் வினாவிற்கு விடையளிக்குக.

A: ஆனால் புரொபசர் எல்லா விசித்திரங்களும் விஞ்ஞானம் ஆகாது.

B: அதெல்லாம் விசித்திரமாகக் கொள்ளுற ஆக்களைப் பொறுத்திருக்கு.

C: ............நீங்கள் இதை நம்புறியளா?

இவ்வுரையாடலில் கலந்து கொள்ளும் பாத்திரங்கள் A.B.C.என்பன முறையே

(1) சிவாயர், புறொபசர், அருளர் (2) அருளர், தியாகர், பொதுவர்

(3) புரொபசர். அருளர்.பொதுவர் (4) தியாகர், அருளர், பொதுவர்

(5) புரொபசர், அருளர், தியாகர் (.......)

31. சைக்குளோராமா எனப்படும் ஒளியமைப்பு மேடையில் அமைக்கப்படுவது

(1) முன்பகுதியில் (2) இடப் பக்கத்தில் (3) வலப்பக்கத்தில்

(4) பின்பக்கத்தில் (5) விதானத்தில் (......)

32. ஒளிவிதானிப்பின் போது குறிப்பாக ஒரு பாத்திரத்தை சுட்டும் ஒளிவிளக்கு

(1)பொட்டொளி (2) கீற்றொளி (3) விரிகைச் சக்கரம்

(4) பெருக்கொளி (5) மங்கலாக்கி (......)

33. புத்தளித்தல் அரங்கில் நடிகர் தெரிவு இடம் பெறுவது பெரும்பாலும்

(1) திறந்த தெரிவு மூலம் (2) மறைமுகத் தெரிவு மூலம்

(3) சல்லடைத் தெரிவு மூலம் (4) நியமத் தெரிவு மூலம்

(5) விசேட தெரிவு நுட்பங்கள் மூலம் (.......)

34. நாடகமொன்றிலே காட்சி விதானிப்புச் செய்ய வேண்டுவதற்கான காரணிகளில் ஒன்றாக அமையாதது

(1) நாடகத்தின் கதையமைப்பைத் தெரியப்படுத்தல்

(2) நாடகத்தில் வரும் பாத்திரங்களின் இயல்பைக் காட்டுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) நாடகத்தில் வரும் பாத்திரங்களின் அசைவியக்கத்திற்கு உதவுதல்

(4) நாடகத்தின் வகை, மோடி என்பவற்றைத் தெரியப்படுத்தல்.

(5) நாடகத்தைப் பகட்டு ஆடம்பரமானதாகக் காட்டுதல் (……)

35. யதார்த்த நாடகத்தின் வேடஉடைகள், வேடப்புனைவு பெரும்பாலும்

(1) குறியீட்டுப் பண்பு கொண்டதாக இருக்கும்

(2) பகட்டு ஆடம்பரமானதாக் காணப்படும்

(3) வாழ்க்கையை ஒத்தனவாகக் காணப்படும்

(4) பாத்திரங்கள் யாவும் ஒரேமாதிரியான தன்மையாகக் காணப்படும்

(5) முத்துக்கள், மணிகள் பதித்த ஆடைகளும், ஒப்பனைகளும் காணப்படும் (………)

36.உயரமான ஒரு நடிகர் கட்டையான ஒரு பாத்திரத்தை ஏற்க வேண்டுமாயின் அவர் அணிய வேண்டியது

(1) நேர் கோடுகள் கொண்ட ஆடை

(2) குறுக்குக் கோடுகள் கொண்ட ஆடை

(3) சதுரப் பெட்டிகள் கொண்ட ஆடை

(4) தனிநிறம் கொண்ட ஆடை

(5) குறுக்கு, நேர் கோடுகள் கொண்ட ஆடை (…….)

37. பின்வருவனவற்றுள் வேடமுகத்தின் பயன்பாடு எனக் கருத முடியாதது

(1) பாத்திரத்தின் இயல்பைக் காட்டுதல்

(2) ஒருநடிகர் பல பாத்திரங்களை ஏற்றுக்கொள்ளல்

(3) பலர் ஒரு பாத்திரத்தை ஏற்றுக்கொள்ளல்

(4) மனிதரல்லாத பாத்திரங்களை ஏற்றுக் கொள்ளல்

(5) உணர்ச்சிகளை மாறிமாறிக் காட்டுதல் (…….)

38. நடிகர் ஒருவரின் பேச்சுத் திறனை வளர்க்க உதவும் பயிற்சி

(1) உடல் தளர்வுப் பயிற்சி (2) ஒத்திசைவுப் பயிற்சி

(3) உணர்வு வெளிக்காட்டும் பயிற்சி (4) அவதானப் பயிற்சி

(5) குரல் பயிற்சி (……)

39. மேடை முகாமையாளர் ஒரு நாடகத்திற்கு அவசியமாகவிருப்பது ஏனெனில் அவரில்லாது

(1) ஒலி, ஒளி சரியாக வராது (2) இசை ஒழுங்கமைக்க முடியாது

(3) காட்சிகளின் ஓட்டத்தை சரியாக பேணமுடியாது

(4) நடிகர்கள் சரியாக ஒப்பனை செய்ய முடியாது

(5) வேடஉடைகளை சரியாக அணிய முடியாது (……)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. உணர்ச்சிகள் உடலில் வெளிப்படுத்தப்படுவதை தமிழில் குறிப்பிடுவது

(1) மெய்ப்பாடு என (2) கதாசிஸ் என (3) அனுபவம் என

(4) ரச உணர்வு என (5) மெய்யுணர்வு என (......)

கல்விப் பொது தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2012 ஓகஸ்ற்

புதிய பாடத்திட்டம்

## நாடகமும் அரங்கியலும் II

### பகுதி II

### பிரிவு A

(எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக)

1. "வில்லியம் சேக்ஸ்பியர் தனது நாடகங்களினுடாக என்றென்றும் பொருந்தி நிற்கும் உலகப் பொதுமையான மனித இயல்புகளை எடுத்துக் கூறுகின்றார்".

i. யூலியர் சீசர் நாடகத்தில் வரும் பிரதான மோதுகை யாது? (05 புள்ளிகள்)

ii. யூலியர் சீசர் நாடகத்தினுடாக என்றென்றும் பொருந்தி நிற்கும் மனித இயல்புகளைக் சேக்ஸ்பியர் எவ்வாறு எடுத்துக் கூறுகின்றார் என்பதை விளக்குக. (07 புள்ளிகள்)

2. "ஐரோப்பிய அரங்கில் ஹென்றிக் இப்சனுடன் யதார்த்தவாதம் முழுமையடைந்து விட்டது" என்பர்.

i. அரங்கில் யதார்த்தவாதம் என்பது எவ்வாறு அமைகிறது? (05 புள்ளிகள்

ii. இப்சனின் 'பொம்மை வீடு' நாடகத்தினுடாகத் தெரிய வரும் பிரதான முரண்பாட்டைச் சித்திரித்துக் காட்டுக. (10 புள்ளிகள்)

3. "காளிதாஸர் எழுதிய நாடகங்களுள்ளே சிறந்த நாடகமாக அபிக்ஞான சாகுந்தலத்தைக் குறிப்பிடுவர்".

i. இந்நாடகத்தில் வரும் பிரதான பாத்திரங்கள் யாவை? (03 புள்ளிகள்)

ii. ஒவ்வொரு பாத்திரங்களினதும் இயல்புகளைச் சித்திரிக்குக. (05 புள்ளிகள்)

iii. சமஸ்கிருத நாடகங்களின் பொதுவான பண்புகளுடன் இந்நாடகம் ஒத்துப்போவதை உதாரணங்களுடன் விளக்குக. (07 புள்ளிகள்)

### பிரிவு B

(எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக)

4. "தமிழ்ப் பாரம்பரியத்தின் அரங்க ஊற்றுக்களைக் கூத்து ஆற்றுகைகளில் காணலாம்"

i. "ஆடல்பாடல்களுடாகக் கதையை வெளிக் கொணர்வது கூத்தாகும்." 'அலங்காரரூபன்' நாடகத்தை ஆதாரமாகக் கொண்டு விளக்குக. (07 புள்ளிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. மரபுவழிக் கூத்தில் அண்ணாவியரின் பங்களிப்பு யாது? (04 புள்ளிகள்)

iii. "கூத்து அளிக்கையில் பார்ப்போர் பங்குகொள்வது என்பது ஒரு அழகியல் அம்சம் ஆகும்." என்பதை ஏற்றுக்கொள்கிறீரா? கருத்துரைக்க. (04 புள்ளிகள்)

5. இலங்கைத் தமிழ் அரங்கில் 1970 களின் பிற்பகுதியில் ஆரம்பிக்கபெற்ற பின்வரும் அரங்க நிறுவனங்கள் பற்றி குறிப்புக்கள் வரைக.

i. நடிகர் ஒன்றியம் ii. நாடக அரங்கக் கல்லூரி iii. அவைக்காற்று கலைக் கழகம்

3 X 5- 15 புள்ளிகள்

6. சிங்களப் பாரம்பரிய அரங்கில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும் பின்வரும் அரங்க வடிவங்கள் பற்றி குறிப்புக்கள் வரைக.

i. தொவில் ii. ரட்டயக்கும iii. சன்னியக்கும iv. கோலம

v. சொக்கரி 5 X 3- 15 புள்ளிகள

கல்விப் பொது தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2011 ஓகஸ்ற்

புதிய பாடத்திட்டம்

## நாடகமும் அரங்கியலும் I

### பகுதி I

1. நாடகம் என்பது

(1) தனிக்கலை (2) பிரதிமைக்கலை (3)ஆற்றுகைக்கலை

(4) தமிழ் இலக்கியத்தின் ஒரு கலை (5) நாட்டியக் கலை (......)

2. மேல்நாட்டு நாடக மரபின் ஊற்றுக்காலாக கொள்ளப்படுவது

(1) சற்றயர் ஆகும் (2) மகிழ்நெறி ஆகும் (3) டித்திறாம் ஆகும்

(4) அற்புத நாடகம் ஆகும் (5) பொம்மலாட்டம் ஆகும் (......)

3. அகமெம்னன் என்பது

(1) தனியே ஒரு நாடகத்தைக் குறிப்பது. (2) முத்தொகுதி நாடகத்தைக் குறிப்பது.

(3) கிரேக்க வரலாற்றுக் கதைகளைக் குறிப்பது. (4) சோபோக்கிளிசால் எழுதப் பெற்றதாகும்.

(5) மகிழ்நெறி வகை நாடகத்தைச் சார்ந்ததாகும். (......)

4.புராதன கிரேக்க நாடக வரலாற்றில் முதன்முதலில் தனியொரு திறஜெடி நாடகத்தை எழுதியவர்

(1)சோபோகிளிஸ் (2) யூரிப்பிடிஸ் (3) செனாக்கா

(4) ரெரன்ஸ் (5) அரிஸ்ரோபன்ஸ் (......)

5. திறஜெடி என்ற சொல்லின் உண்மையான கருத்து

(1) சோக நாடகம் (2) அவல நாடகம் (3) றகூதா(Tragoida) எனும் பாடல்

(4) துன்ப நாடகம் (5) கருணை நாடகம் (......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. கொமடியா டெல் ஆர்த்தே எவ்விடத்தில் தோன்றிய வடிவமாகும்

(1) பிரான்ஸ்சில் (2) கிறீஸ்சில் (3) இங்கிலாந்தில்

(4) இத்தாலியில் (5) ஸ்பெயினில் (......)

7. மொலியே என்பவர்

(1) ஆங்கில நாடக ஆசிரியராவார் (2) ஜேர்மனிய நாடக ஆசிரியராவர்

(3) பிரெஞ்சு நாடக ஆசிரியராவர் (4) ஸ்பானியா நாடக ஆசிரியராவர்

(5) சுவிஸ்சின் நாடக ஆசிரியராவர் (......)

8. சேக்ஸ்பியரின் நாடகங்களை

(1) திறஜெடி, மகிழ்நெறி நாடகமென வகுப்பர்.

(2) திறஜெடி,சற்றயர் நாடகமென வகுப்பர்.

(3) திறஜெடி, மகிழ்நெறி, சற்றயர் நாடகமென வகுப்பர்

(4) திறஜெடி, மகிழ்நெறி, வரலாற்று நாடகமென வகுப்பர்.

(5) திறஜெடி வரலாற்று நாடகமென வகுப்பர்.

9. சேக்ஸ்பியரின் நாடகங்கள் பெரும்பாலும் நடைபெறுவது

(1) காலையில் (2) பகலில் (3) மாலையில்

(4) நள்ளிரவில் (5) விடியற்காலையில் (......)

10. மறைஞான நாடகங்கள் என்பவை

(1) துப்பறியும் நாடகங்களைச் சேர்ந்தவையாகும்.

(2) அற்புதக் கதைகளைக் கொண்டவையாகும்.

(3) ஒழுக்கப் பண்புகளைக் கொண்டவையாகும்.

(4) இயேசுவின் வாழ்க்கை வட்டத்தைக் குறிப்பதாகும்.

(5) உலகியல் கதைகளைக் கொண்டதாகும். (......)

11. ஐரோப்பிய நாடக அரங்கில் முதல் பிரச்சினை நாடகங்களை எழுதியவராகக் கொள்ளப்படுபவர்.

(1) சோபோகிளிஸ் (2) எமிலிசோலா (3) பிறெ.்.க்ற்

(4) இப்சன் (5) பீற்றர்புறூக்ஸ் (......)

12. மேல்நாட்டு நாடக வளர்ச்சிக்கு ஸ்ரனிஸ்லெவஸ்கியின் பங்களிப்பு

(1) ஒறோ நாடக வகை அறிமுகம் செய்தமை.

(2) முறைமை எனும் நடிப்பு முறைமையைக் கொண்டு வந்தமை.

(3) அந்நியமாதல் நடிப்பு கோட்பாட்டை முன்வைத்தமை.

(4) பிரயோக அரங்க முறையை அறிமுகம் செய்தமை.

(5) உடற் பொறிமுறை நடிப்பைக் கொண்டு வந்தமை. (......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. பிரயோக அரங்கு என்பது அரங்கில்

(1) கேளிக்கைக்குப் பயன்படுத்துவது. (2) பொழுது போக்கிற்காகப் பயன்படுத்துவது.

(3) சிகிச்சை முறையாகப் பயன்படுத்துவது. (4) இசை விளக்கத்திற்கு பயன்படுத்துவது.

(5) நடனத்திற்குப் பதிலாகப் பயன்படுத்துவது. (.......)

14. விவாத அரங்கு என்னும் forum Theater

(1) பிறெ.்.கற் (2) பீற்றர்புறூக் (3) மேயர் கோல்ட்

(4) ரி.எஸ். ஏலியட் (5) அகஸ்தாப்போல் (.......)

15. அமெரிக்காவில் நவீன நாடக வரலாற்றைத் தொடக்கி வைத்தவர்......... எனும் பெயரை கொண்டவர்.

(1) யூயின் ஓநீல் ஆவார். (2) ஆதர் மில்லர் ஆவார். (3) ரெனர்சி வில்லியம்ஸ் ஆவார்.

(4) இயனஸ்கோ ஆவார். (5) ஸ்ரையின் பேர்க் ஆவார். (......)

16. அரங்கில் அளிக்கை முறையில் ஐரோப்பிய நாடக வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் ரஸ்யக் கலைஞர்.

(1) அன்ரன் செக்கோ (2) புஸ்கின் (3) மேயர் கோல்ட்

(4) மார்க்சிம் கோர்க்கி (5) டால் ஸ்ராய் (......)

17. பீஜிங் ஒபேறா என்பது

(1) சீனாவின் நவீன நாடக வடிவமாகும். (2) சீனாவின் நவீன நாடக அரங்காகும்.

(3) சீனாவின் புராதன அரங்க கட்டடமாகும். (4) சீனாவின் புராதன இசை நாடக வடிவமாகும்.

(5) சீனாவின் புராதன நடன வடிவமாகும். (......)

18. சீனா நாடக வரலாற்றில் பிரசித்தி பெற்ற சிவப்பு விளக்கு என்பது

1) புராதன சீன மரபிற்குரியது 2) வணக்கத்திற்குரியது. 3) சீன சடங்கு முறைகளைக் குறிப்பது.

4) சீனப் புரட்சியை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது. 5) சீனப் பாடல் அரங்கைக் குறிப்பது. (.......)

19. யப்பானிய முக்கிய பாரம்பரிய நாடக அரங்கில் ஒன்றாகக் கருதக்கூடியது.

(1) கபுக்கி (2) புன்றகு (3) நோ (4) ஜென்ரொகு (5) கியோன்யென் (..,.......)

20. நாட்டியசாஸ்திரம் என்பதில் வரும் நாட்டிய என்பது.

(1)நாடகம் பற்றியதாகும் (2) நடனம் பற்றியதாகும் (3) நாட்டிய நாடகம் பற்றியதாகும்.

(4) நடன நாடகம் பற்றியதாகும். (5) நாட்டியம் பற்றியதாகும். (.......)

21. நாடக வகையைக் குறிக்கும் சமஸ்கிருதச் சொல்

(1) ரூபக (2) உருபக (3) ஆலம்பன (4) விபாவ (5) அனுபாவ (.......)

22. தசரூபகம் என்னும் நூலை எழுதியவர்

(1) பரதர் ஆவார் (2) காளிதாஸர் ஆவார் (3) பவபூதி ஆவார்

(4) தனஞ்செயன் ஆவார். (5) சூத்திரகர்ஆவார் (......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. கதகளி என்பது

(1) தமிழ் நாட்டிற்குரியது. (2) கேரளத்திற்குரியது (3) மகாராஸ்டிராவுக் குரியது

(4) உத்தரப்பிரதேசத்திற்குரியது (5) கர்னாடகத்திற்குரியது (.......)

24. வங்காளப் பிரதேசத்தின் பாரம்பரிய நாடகத்தின் பெயர்

(1) யக்ச கானம் (2) யாத்ரா (3) பாகவதமேளா (4)கூடியாட்டம் (5) நௌதாங்கி (......)

25. சிலப்பதிகார காலத்திற்கு முன்னர் கூத்து ஆடிய பெண்கள்

(1) பாடினி என அழைத்தனர் (2) விறலியர் என அழைத்தனர் (3) பதியிலார் என அழைத்தனர்

(4) தேவரடியார் என அழைத்தனர் (5) மாணிக்கத்தார் என அழைத்தனர் (......)

26. அரங்கேற்று காதையில் மாதவியாடியதாக கூறப்படும் நடன வகையின் எண்ணிக்கை

(1) எட்டு (2) ஒன்பது (3) பத்து (4) பதினொன்று (5) பன்னிரண்டு (......)

27. சிலப்பதிகாரத்தில் வரும் கானல் வரி என்பது

(1) ஆடல் வகையைச் சேர்ந்தது. (2)பொதுவான பாடல் வகையைச் சேர்ந்தது.

(3) வரிக்கூத்து ஆடல் வகையைச் சேர்ந்தது. (4) ·இருவர் பாடுவதைக் குறிப்பதாகும்.

(5) பலர் சேர்ந்து ஆடுவதைக் குறிப்பதாகும். (......)

28. மகேந்திரவர்மனால் எழுதப்பட்ட நாடகம்

(1) பகவத அர்ஜ்ஜிகம் (2) சாக்கைக் கூத்து (3) ஆரியக் கூத்து

(4) பூம்புலியூர் நாடகம் (5) மத்த விலாச பிரகசனம் (......)

29. இராஜஇராஜேஸ்வரன் நாடகம்

(1) சோழப் பெரு மன்னன்ர்கள் வரலாற்றைக் கூறுவதாகும்.

(2) இராஜேந்திரன் வரலாற்றைக் கூறுவதாகும்.

(3) இராஜஇராஜேஸ்வரன் புகழ். கீர்த்தி பற்றிக் கூறுவதாகும்.

(4) கோவில் கோபுர பெருமை பற்றிக் கூறுவது. (.......)

30. 'நந்தனார் சரித்திரக் கீர்த்தனை' என்னும் நாடகத்தை இயற்றியவர்

(1) கோபால கிருஸ்ண பாரதியார் (2) திரிகூடலூர் ராஜப்பர் (3) அருணாசலக் கவிராஜர்

(4) வில்லி புத்தூர் ஆழ்வார் (5) தியாகராஜ பாகவதர் (......)

31. சி. என். அண்ணாத்துரை அவர்களால் எழுதப்பட்ட நாடகம்

(1) தூக்கு மேடை (2) துர்க்கிர அவலம் (3) வேலைக்காரி (4) நீல மலைத்திருடன்

(5) தங்கராணி (......)

32. தமிழ் நாட்டில் புகழ் பெற்ற 'கருஞ்சுழி' என்னும் நாடகத்தை எழுதியவர்

(1) இராமனுஜம் (2) ரெங்கராஜன் (3) மங்கை (4) வேலுசரவணன் (5) ஆறுமுகம் (......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. கிருஸ்ணாழ்வாருக்குப் பெயரீட்டிக் கொடுத்த பாத்திரம்

(1) சுபத்திரை (2) அனுமன் (3)அல்லி (4) பவளக்கொடி (5) பபூன் (……)

34. 'உடையார் மிடுக்கு' என்னும் பெயர் பெற்ற நாடகத்தை எழுதியவர்

(1) க. சிதம்பரநாதன் (2) ம. சண்முகலிங்கம் (3) நா. சுந்தரலிங்கம்


(4) செ. சுந்தரம்பிள்ளை (5) க. கணபதிப்பிள்ளை (……)

35. நாடக அரங்க கல்லூரியின் நிறுவுனர்

(1) மரிய சேவியர் அடிகளார் (2) ம. சண்முகலிங்கம் (3) பா. பாலசிங்கம்

(4) மெற்றாஸ் மெயில் (5) பிரான்ஸ்சிஸ் ஜெனனம் (……)

- 36 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள படங்களை ஆதாரமாகக் கொண்டு விடை தருக.



36. படம் 'அ' குறிப்பிடப்படும் நாட்டிய வகை

(1) மோகினி ஆட்டம் (2) ஒடிசி (3) பரத நாட்டியம் (4) மணிப்புரி (5) குச்சுப்பிடி (……)

37. படம் 'ஆ' குறிப்பது

(1) பரத நாட்டியம் (2) குச்சுப்பிடி (3) மணிப்புரி (4)மோகினி ஆட்டம் (5) ஒடிசி (……)

38. படம் 'இ' குறிப்பது

(1) பரத நாட்டியம் (2) ஒடிசி (3) மணிப்புரி (4)மோகினி ஆட்டம் (5) குச்சுப்பிடி (……)

39. படம் 'ஈ' குறிக்கும் ஆட்டம் ஆடப் பெறும் பிரதேசம்

(1) மணிப்பூர் (2) ஒரிசா (3) ஆந்திராப் பிரதேசம் (4)கேரளா (5) தமிழ்நாடு (……)

40. படம் 'உ' குறிக்கும் ஆட்டம்

(1) பரத நாட்டியம் (2) ஒடிசி (3) மணிப்புரி (4)மோகினி ஆட்டம் (5) குச்சுப்பிடி (……)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொது தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2011 ஓகஸ்ற்

## நாடகமும் அரங்கியலும் I

### பகுதி II

### பிரிவு A

(எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக)

1. நாடகம் எனும் கலை வடிவம்

i. சமயச் சடங்கு நிலையிலிருந்து ஒரு தனிக் கலை வடிவமாக எவ்வாறு மேற்கிளம்பியது? (04 புள்ளிகள்)

ii. அவ்வளர்ச்சியை படிநிலைரீதியாக விளக்குக. (05 புள்ளிகள்)

iii. இவ்வளர்ச்சிக் கட்டங்கள் கிரேக்க நாடக வரலாற்றிலே தென்படும் முறைமையை விளக்குக. (06 புள்ளிகள்)

2. "திறஜெடி நாடக வகை பற்றிய எண்ணக்கருவினைப் புலமை ரீதியாக எடுத்துக் காட்டியவர் அரிஸ்ரோட்டில் என்பர்".

i. அவ்வாறு அவர் எடுத்துக் காட்டிய நூல் யாது? அதன் அடிப்படைப் பொருள் யாது? (02 புள்ளிகள்)

ii. திறஜெடியின் பண்புகள் என அவர் சுட்டும் ஆறு பண்புகளும் யாவை? விளக்குக.

iii. 'கதாசிஸ்' எனும் வெளிக்கொணர்கை, நாடகத்தைப் பார்போருக்கு எத்தகைய மனநிலையை ஏற்படுத்துகிறது? (07 புள்ளிகள்)

3. "அரங்க கட்டுமானம் ( Theatre Architecture) என்பது அடிப்படையில் பார்ப்போரின் நாடக விளக்கத்திற்கும் நாடகத்தின் முனைப்பான அளிக்கைக்குமான பின்புலத்தைச் சுட்டுவதாகும்". இவ்வம்சம் கீழ்வரும் அரங்குகளில் எவ்வாறு புலப்படுத்துகிறது என்பதை விவரிக்குக.

i. கிரேக்க அரங்கு (05 புள்ளிகள்)

ii. வட்டக்களரி (05 புள்ளிகள்)

iii. புறொசீனியம் அரங்கு (05 புள்ளிகள்)

### பிரிவு B

(எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக)

4.

i. இந்திய அரங்கில் வழங்கும்

(அ) மார்க்க

(ஆ) தேசி

எனும் வகைகளை அறிமுகம் செய்க. (07 புள்ளிகள்)

ii. இவ்வாறு நியாயப்படுத்துவதற்கான நியாயப்பாட்டை விளக்குக. (08 புள்ளிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.

i. நடிப்பு என்பதனை நாடகத்தின் பிரதான வெளிப்பாட்டு முறையாக ஏன் கொள்ளப்படுகிறது?
(05 புள்ளிகள்)

ii. கீழ்வரும் நடிப்பு முறைகளை விளக்குக.

(அ) முறைமைக் கோட்பாட்டு நடிப்பு முறை

(ஆ) அந்நியமாதல் நடிப்பு முறை (10 புள்ளிகள்)

6. கீழே தரப்பட்டுள்ளவற்றுள் மூன்றிற்கு சிறுகுறிப்புக்கள் எழுதுக.

i. யப்பானிய கபுக்கி அரங்கு ii. நிழற்பாவை அரங்கு iii. வானொலி நாடகம்
iv. நால்வகை அபிநயங்கள் v. கதகளி (3x05= 15 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொது தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை,2011 ஓகஸ்ற்

புதிய பாடத்திட்டம்

## நாடகமும் அரங்கியலும் II

### பகுதி I

(1) 'அன்ரிக்கனி' நாடகத்தில் வரும் தைரீசியஸ் எனும் பாத்திரம் ஒரு

(1) காவலாளி (2) போர்வீரன் (3) செய்தியாளன் (4) தூதன் (5) தீர்க்கதரிசி (……..)

(2) இப்சனின் 'பொம்மை வீட்டில்' வரும் கதாநாயகியின் பெயர்

(1) கோடில்யா (2) லோறா (3) நோறா (4) டெஸ்ரிமோனா (5) கிறிஸ்ரீனா (……)

(3) சேக்ஸ்பியர் பயன்படுத்தும் முட்டாள் பாத்திரம் எப்பொழுதும்

(1) சிரிப்புக்கிடமானவற்றைப் பேசும் (2) புத்தி பூர்வமானவற்றைப் பேசும்

(3) தேவையானவற்றைப் பேசும் (3) மடைத்தனமானவற்றைப் பேசும்

(5) விசர்த்தனமானவற்றைப் பேசும் (……)

(4) யூலியஸ் சீசரைக் கொலை செய்வதற்கு எதிராகத் தூண்டிய பிரசித்தமான பேச்சினைப் பேசிய நாடகப் பாத்திரம்

1) புறூட்டஸ் (2) காசியஸ் (3) கயஸ்கா (4) மார்க் அன்ரனி (5) ஒக்டேவியசீசர் (…….)

(5) காளிதாஸர் என்னும் நாடகாசிரியர் தான் எழுதிய நாடகத்திற்கு வைத்த பெயர்

(1) சாகுந்தலம் (2) சகுந்தலை (3) அபிஞ்ஞான சகுந்தலம்

(4) அபிக்ஞான சகுந்தலை (5) அபிக்ஞான சகுந்தலா (……..)

(6) சேக்ஸ்பியர் நாடகங்கள் அவரது காலத்தில் அவைக்காற்றப்பட்டமை.

(1) லண்டனில் (London) ஆகும். (2) கேம்பிறிஜ்ஜில் (Cambridge) ஆகும்.

(3) ஓக்ஸ்போர்டில் (Oxford) ஆகும். (4) மான்செஸ்டரில் (Manchester) ஆகும்.

(5) ஸ்ராபோட் அபொன் அவனில் (Straford Upon Avon) ஆகும். (……..)

(7) கோலம நாடக மரபு இலங்கையில் எம்மாகணத்தில் ஆடப்படுகிறது?

(1) மத்திய மாகணம் (2) தென் மாகணம் (3) மேல் மாகணம்

(5) வட மத்திய மாகணம் (5) சப்பிரகமுக மாகணம் (…….)

(8) எலிசபெத் காலத்தில் சேக்ஸ்பியரின் நாடகங்கள் நிகழ்த்தப்பட்டது.

(1) சுழல் மேடையில் (2) வட்டமேடையில் (3) படச்சட்டமேடையில்

(4) அரை வட்ட மேடையில் (5) துருத்திய மேடையில் (…….)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(9) சேக்ஸ்பியர் தனது நாடகங்களில் பிரதான மூலகமாகப் பயன்படுத்தியது

(1) வேடஉடைகளை (2) இசையை (3) வேடப்புனைவை

(6) மேடை ஒளியை (5) சொற்களை (.......)

(10) யப்பானிய பாவை அரங்கு அழைக்கப்படுவது

(1) நோ என (2) கபுக்கி என (3) கோவாகா என

(4) புன்ரகு என (5) கிஜோஜன் என (.......)

(11) பின்வருவனவற்றுள் எதிலிருந்து பேராசிரியர் சரத்சந்திர மனமே நாடகத்தை பாரம்பரிய நாடக வடிவமாக வளர்த்துக் கொண்டார்?

(1) சொக்கரியிலிருந்து (2) கோலமவிலிருந்து (3) நாடகமவிலிருந்து

(4) நூர்த்தியிலிருந்து (5) தொவிலிலிருந்து (.......)

(12) சிங்கள நாடக உலகில் சிறுவர் நாடகத்துறையிலே முக்கியஸ்தவர்களில் ஒருவர்.

(1) சிறியானி அமரசிங்க (2) ஹென்றி ஜெயசேன (3) சேமலதா சுபசிங்க

(4) பராக்கிரம நிரியல (5) தர்மசிறி பண்டர நாயக்கா (......)

(13) மக்கள் களரி (ஜனகரலிய) என்ற நாடக அமைப்பை நிறுவி நாடகக்கலையை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்பவர்.

(1) தர்மசிறி பண்டார நாயக்கா (2) பிரசன்ன விதானகே (3) பராக்கிரம நிரியல

(4) வோல்ட மாறசிங்க (5) அஜீத் ரூபசிங்க (......)

(14) சொக்கரி ஆற்றுகை ஒரு

(1) பேயோட்டும் சடங்கு (2) கழிப்புச் சடங்காகும் (3) கருவளச் சடங்காகும்

(4) மழை வேண்டிச் செய்யப்படும் சடங்காகும் (5) பிசாசை வரவழைக்கும் சடங்காகும் (......)

(15) உடக்குப்பாஸ் என்பது

(1) யாழ்ப்பாணத்திற்குரியதாகும் (2) மட்டக்களப்பிற்குரியதாகும் (3) மன்னாருக்குரியதாகும்

(4) வன்னிக்குரியதாகும் (5) மலையகத்திற்குரியதாகும் (......)

(16) காமன் கூத்தில் பிரதானமாகப் பயன்படும் இசைவாத்தியம்

(1) மிருதங்கம் (2) ஹார்மோனியம் (3) தப்பு (4) தவில் (5) பறைமேளம் (.......)

(17) பின்வரும் நாடகங்களில் கிறிஸ்தவம் சாராத நாடகம்

(1) எஸ்தாக்கியர் (2) கண்டியரசன் (3) என்றிக் எம்பரதோர்

(4) ஞானசௌந்தரி (5) மூவிராசாக்கள் (......)

(18) யப்பானிய நாடக அரங்கில் பாலப்பாதை அமைந்திருக்கும் நாடக மரபு

(1) நோ (2) கபுக்கி (3) புன்ரகு

(4) ஜேன்ரகு (5) கோவாக்க (.......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(19) அலங்காரரூபன் கூத்து

(1) வடமோடியைச் சார்ந்ததாகும் (2) தென் வடமோடியைச் சார்ந்ததாகும் (3) மகிடியைச் சார்ந்ததாகும்
(4) வடபாங்கைச் சார்ந்ததாகும் (5) வடமெட்டைச் சார்ந்தாகும் (……)

(20) தேரோட்டிமகன் நாடகத்தின் ஆசிரியர்

(1) F.X.C நடராஜா (2) பீ.ஏஸ் இராமையா (3) சே. இராமனுஜம் (4) மு. இராமசாமி
(5) இராமலிங்கச் செட்டியார் (…….)

(21) நாடகத்திற்கான இசையின் இயல்பு

(1) பொருத்தமான இடங்களில் பாடல்களை அமைப்பதாகும்

(2) பாடல்கள் இல்லாது வாத்திய இசையையே கொண்டிருப்பதாகும்.

(3) நாடகத்தினூடே மேலெழும் உணர்ச்சிக்கு அழுத்தம் கொடுப்பதாகும்.

(4) பார்வையாளருக்கு பரிட்சயமான மெட்டுக்களைக் கொண்டிருப்பதாகும்.

(5) நாடகத்தின் கதையோட்டத்திற்கேற்ப பின்னணியாக மட்டும் அமைந்து காணப்படுவதாகும்

(…….)

(22) நாடகத்தின் ஒளியமைப்பு

(1) நடிகர்களின் முகங்களை நன்கு தெளிவுபடுத்துவதற்காகப் பயன்படும்.

(2) நாடக இசைக்கு ஏற்றதாகப் பயன்படும்.

(3) நாடக மேடைக்கு ஒளியூட்டுவதாகப் பயன்படும்

(4) நாடகக் கதையோட்டத்திற்கும் பாத்திரங்களின் உணர்வைச் சித்திரிப்பதற்குமாகப் பயன்படும்.

(5) காட்சிகளை அழகாக்குவதற்காகப் பயன்படும் (……..)

(23) நாடகத்தில் வேடப்புனைவு என்பது அவசியமாவதற்கான காரணம், அது

(1) பார்ப்போர் கவனத்தை ஈர்ப்பது

(2) நாடகத்தின் ஆற்றுகைப் பணியை உணர்த்துவது.

(3) நாடக அலங்காரமாகக் காட்டுவது.

(4) பார்போருக்கும் நடிப்போருக்கும் பாத்திரத்தின் இயல்பையும் உள்ளார்ந்த உணர்வையும் ஏற்படுத்துவது

(5) வெளிப்புற தோற்றத்தை கவர்ச்சியாகக் காட்டுவது (…….)

(24) நாடகத்தில் ஒரு காட்சியில் ஒரு நடிகன் பேசும் பொழுது அரங்கில் உள்ள மற்றைய நடிகர்

(1) நாடகம் பார்ப்போரை அவதானிக்கவேண்டும் (2) குறுக்கே பேசாது இருத்தல் வேண்டும்

(3) நெறியாளரைப் பார்த்தல் வேண்டும்

(4) உடல் அசைவுகளில் வேண்டிய பதிற் குறிகளைக் காட்டவேண்டும்

(5) நினைவூட்டுனரைக் கவனிக்க வேண்டும் (……)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(25) தயாரிப்பாளரின் மிக முக்கிய பணி

(1) பொருத்தமான பயிற்சிகளை வழங்குதல்.

(2) நெறியாளருக்கு வேண்டிய நேரத்தில் புத்திமதி கூறுதல்

(3) விற்பனைச் சீட்டுக்களை வீடுவீடாகச் சென்று விற்றல்.

(4) தயாரிப்புக்கு வேண்டிய நிதி வசதிகளைச் செய்து கொடுத்தல்.

(5) நடிகருக்குப் பொருத்தமான பாத்திரங்களை வழங்குதல். (......)

(26) நாடகம் மேடை ஏறும் போது நெறியாளர் ஒருவர்

(1) ஒளி,ஒலிகளைக் கவனிக்கவேண்டும். (2) காட்சி மாற்றங்களைச் செய்ய வேண்டும்

(3) ஒலி வாங்கிகளைக் கவனிக்க வேண்டும்.(4) எடுத்துரைப்பாளராக விளங்க வேண்டும்.

(5) மேடையின் ஓரமாக நின்று அனைத்தையும் கவனிக்க வேண்டும். (.......)

(27) நாடகத்திற்கான விளம்பரம் பொதுவாக

(1) நடிகரால் செய்யப்பட வேண்டும் (2) மண்டபக்காரர்களால் செய்யப்பட வேண்டும்

(3) நெறியாளரால் செய்யப்பட வேண்டும் (4) தயாரிப்பாளரால் செய்யப்பட வேண்டும்

(5) மேடை முகாமையாளரால் செய்யப்பட வேண்டும் (.......)

(28) வேடமுகம் என்பது

(1) நடிகரின் முகத்தை மறைப்பதற்காக பயன்படும். (2) சிரிப்பூட்டுவதற்காகப் பயன்படும்.

(3) ஆடை அணிகளுக்கு ஏற்றதாகப் பயன்படும்.

(4) பாத்திரத்தின் இயல்பைக் காட்டுவதாகப் பயன்படும். (5) விகாரத்தன்மையுடையதாகக் பயன்படும். (.......)

(29) நாடகத்தில் பயன்படும் ஆடை அணி

(1) அலங்காரத்திற்கு ஏற்றதாக அமைதல் வேண்டும்.

(2) நாடக மோடிக்கு ஏற்றதாக அமைதல் வேண்டும்.

(3) நாடகம் சித்திரிக்கும் காலத்திற்கு ஏற்றதாக அமைதல் வேண்டும்.

(4) பாத்திரத்தின் அழகை அதிகரிப்பதாக அமைதல் வேண்டும்

(5) பகட்டு, ஆடம்பரமானதாக அமைதல் வேண்டும். (......)

(30) நடிகர் என்பவர்

(1) அழகான உடலைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(2) உள்ளார்ந்த நடிப்பாற்றல் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(3) பொறுதியுணர்வு உடையவராக இருத்தல் வேண்டும்.

(4) சபைக் கூச்சம் அற்றவராக இருத்தல் வேண்டும்.

(5) பாடும் திறன் உள்ளவராக இருத்தல் வேண்டும் (........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(31) மகிடிக் கூத்து பெரும்பாலும் ஆடப்படும் பிரதேசம்

(1) மட்டக்களப்பு (2) யாழ்ப்பாணம் (3) கண்டி (4) மன்னார் (5) வன்னி (.......)

(32) நா. சுந்தரலிங்கத்தின் 'விழிப்பு' நாடகத்தின் பிரதான கரு

(1) பெண்கள் பிரச்சினை (2) முதியோர் பிரச்சினை (3) கல்விப் பிரச்சினை

(4) வேலையில்லாப் பிரச்சினை (5) சிறுவர் பிரச்சினை (.......)

- 33 தொடக்கம் 35 வரையுள்ள வினாக்கள் பின்வரும் உரையாடலை அடிப்படையாகக் கொண்டவை.

A. ஆனால் லாபம் நட்டம் அதிகமாய் வியாபாரத்திலை தான் பார்க்கிறது.

B. ஓம்.ம் அது வரவையும் செலவையும் பொறுத்திருக்கு

C. ஆனால் எனக்கு ஏன் இந்த கஸ்டம் வந்தது.

(33) மேலே உள்ள உரையாடல் 'அபசுரம்' நாடகத்தில் இடம்பெறுவதாகும். இங்கு A, B,C எனக் குறிப்பிடப்படும் பாத்திரங்கள் முறையே

(1) அருளர், தியாகர், சிவாயர் (2) தியாகர், அருளர், பொதுவர்

(2) சிவாயர், புறொபசர், பொதுவர் (4) அருளர், தியாகர். பொதுவர்

(6) புறொபர், அருளர், தியாகர் (......)

(34) இந்நாடகம் முதலில் மேடை ஏறிய ஆண்டு


(1) 1962 (2) 1964 (3) 1966 (4) 1968 (5) 1970 (......)

(35) இந்நாடகம் லும்பினி அரங்கில் மேடையேறிய போது தயாரிப்பை மேற்கொண்டது.

(1) எங்கள் குழு (2) நடிகர் ஒன்றியம் (3) அம்பலத்தாடிகள் குழு

(7) கூத்தாடிகள் குழு (5) அவைக்காற்றுக் கலைக் கழகம் (.......)

(36) படத்தில் காட்டப்பட்டுள்ள அரங்கு குறிப்பது




(1) கூத்தம்பல அரங்கு (2) சீன அரங்கு

(3) சேக்ஸ்பியர் அரங்கு (4) மலேசிய அரங்கு

(5) லுத்துருக் அரங்கு (.......)

(37) படத்தில் காட்டப்பட்டுள்ள நடிகர் தோன்றும் காட்சி சிங்கள



(1) நாடகமவில் வருவதாகும். (2) கோலமவில் வருவதாகும்.

(3) தகட்டசன்னியவில் வருவதாகும்.(4) பகன்மடுவவில் வருவதாகும்.

(5) தொவிலில் வருவதாகும். (.......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(38) படத்தில் காட்டப் பெற்றிருக்கும் காட்சிக்குரிய ஆற்றுகையாக விளங்கக் கூடியது



(1) பவளக்கொடி (2) அல்லி அர்ச்சுனா

(3) இராவணேசன் (4) பூதத் தம்பி

(5) மூவிராசாக்கள் (……)

(39) குழந்தை ம. சண்மகலிங்கத்தின் கல்விப் பிரச்சினை சார்ந்த நாடகம்

(1) வேள்வித்தீ (2) அன்னையிட்ட தீ (3) உறவுகள்

(8) எந்தையும் தாயும் (5) புழுவாய் மரமாகி (……)

(40) 'சமூக மாற்றத்திற்கான அரங்கு' என்னும் நூலினை எழுதியவர்

(1) ம. சண்முகலிங்கம் (2) சி. மௌனகுரு (3) நா. சுந்தரலிங்கம்

(4) க. சிதம்பரநாதன் (5) செ. சுந்தரம்பிள்ளை (……)

## நாடகமும் அரங்கியலும் II

## பகுதி II

### பிரிவு A

(எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக)

1. "அன்ரிக்கனி ஓர் பிரசித்தமான திறஜெடி நாடகமாகும்".

I. நாடகத்தில் எவ்வாறு அவலம் வளர்தெடுக்கப்படுகிறது? விளக்குக. (08 புள்ளிகள்)

II. 'அன்ரிக்கனி'எனும் பாத்திரத்திற்கான வேடப்புனைவு, வேடஉடை அணிகளை எவ்வாறு திட்டமிடுவீர்? (04 புள்ளிகள்)

III. இந்நாடகத்திற்கான காட்சிப்பின்புலம் எவ்வாறு அமைக்கப்படல் வேண்டும்? (03 புள்ளிகள்)

2. I. ஒதெல்லோ நாடகத்திற்கான கதையமைப்பின் பிரதான மோதுகை யாது? (03 புள்ளிகள்)

II. இந்த மோதுகை எந்தெந்தக் கட்டங்களில் வருகின்றன? (05 புள்ளிகள்)

III. எவ்வெவ் பாத்திரங்களினூடாக எவ்வெவ் கூற்றினுடாகத் தெரிய வருகின்றன? (08 புள்ளிகள்)

3. I. ஒரு செயல் அல்லது நிகழ்ச்சி ஒன்றினை அது அபத்தமென என்ன கருத்தில் சொல்கிறோம்? (03 புள்ளிகள்)

II. அபத்த நாடகம் (absurd drama) என்றால் என்ன? அவற்றின் பண்புகள் யாவை? (05 புள்ளிகள்)

III. நா. சுந்தரலிங்கத்தின் 'அபசுரத்தில' காணப்படும் அபத்த நிகழ்ச்சிகளும் அவற்றின் மூலம் தெரிய வரும் அடிப்படையான மனித சமூதாய அம்சங்களும் யாவை? விளக்குக. (07 புள்ளிகள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிவு B

(எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக)

4. கீழே தரப்பட்டுள்ள கிரேக்க நாடகாசிரியர்கள் ஒவ்வொருவரும் கிறீசின் புராதன நாடக வளர்ச்சி நிலைகளை எடுத்துக் காட்டுபவர்களாக அமைந்துள்ளனர். இவர்களுள்

   I. ஈஸ்கலஸ் (05 புள்ளிகள்)

   II. சோபோக்கிளிஸ் (05 புள்ளிகள்)

   III. அரிஸ்ரோபேன்ஸ் (05 புள்ளிகள்)

   ஆகியோர் பணிகளைத் தனித்தனியே விபரித்து புராதன கிரேக்க நாடகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு இவர்கள் எவ்வாறு உதவியுள்ளனர், என்பதை விளக்குக.

5. இலங்கைத் தமிழ் நாடக அரங்கில் பின்வருவோர் ஆற்றிய பணிகளை விவரிக்குக.

   I. க. கணபதிப்பிள்ளை   II. சு. வித்தியானந்தன்   III. நா. சுந்தரலிங்கம்

   IV. சி. மௌனகுரு   V. ம. சண்முகலிங்கம்   (5X3 = 15 புள்ளிகள்)

6. சீன யப்பானிய அரங்க மரபுகளில் காணப்பெறும் அளிக்கை முறைமைகளை விவரிக்குக.

   அன்றேல் சிங்கள நாடக உலகில் பெருமாற்றங்களைச் செய்த சரத்சந்திராவின் பணிகளை விவரிக்குக. (15 புள்ளிகள்)

## மாதிரி வினாத்தாள் - விடைகள்

## நாடகமும் அரங்கியலும் - I

### பகுதி- I

| | | | |
|---|---|---|---|
| 1. 1 | 11. 4 | 21. 2 | 31. 5 |
| 2. 4 | 12. 1 | 22. 2 | 32. 2 |
| 3. 2 | 13. 1 | 23. 5 | 33. 5 |
| 4. 1 | 14. 4 | 24. 2 | 34. 4 |
| 5. 5 | 15. 1 | 25. 1 | 35. 5 |
| 6. 3 | 16. 1 | 26. 2 | 36. 1 |
| 7. 4 | 17. 2 | 27. 5 | 37. 5 |
| 8. 2 | 18. 1 | 28. 3 | 38. 5 |
| 9. 5 | 19. 2 | 29. 4 | 39. 2 |
| 10. 4 | 20. 3 | 30. 4 | 40. 5 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடகமும் அரங்கியலும் - II

### பகுதி- I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 1 | 11. | 3 | 21. | 1 | 31. | 3 |
| 2. | 5 | 12. | 1 | 22. | 2 | 32. | 1 |
| 3. | 2 | 13. | 3 | 23. | 3 | 33. | 1 |
| 4. | 5 | 14. | 5 | 24. | 4 | 34. | 4 |
| 5. | 1 | 15. | 1 | 25. | 4 | 35. | 5 |
| 6. | 5 | 16. | 1 | 26. | 2 | 36. | 2 |
| 7. | 2 | 17. | 5 | 27. | 1 | 37. | 4 |
| 8. | 1 | 18. | 5 | 28. | 4 | 38. | 1 |
| 9. | 2 | 19. | 1 | 29. | 5 | 39. | 1 |
| 10. | 3 | 20. | 3 | 30. | 2 | 40. | 5 |

## நாடகமும் அரங்கியலும் - I

### புதிய பாடத்திட்டம் - 2012

### பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1.- 4 | 11. - 1 | 21.- 4 | 31. - 2 |
| 2.- 1 | 12. - 3 | 22. - 1 | 32. -3 |
| 3.- 3 | 13. - 4 | 23. -1 | 33. - 5 |
| 4.- 1 | 14. - 5 | 24. - 1 | 34. - 4 |
| 5. -4 | 15. - 3 | 25. - 5 | 35. - 4 |
| 6.- 3 | 16. - 4 | 26. -2 | 36. - 2 |
| 7.- 5 | 17. - 4 | 27. - 3 | 37. -5 |
| 8.- 3 | 18 .- 1 | 28. -4 | 38. -1 |
| 9. -3 | 19 .- 4 | 29. -3 | 39. - 2 |
| 10.- 2 | 20 .- 2 | 30. - 1 | 40. 4 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடகமும் அரங்கியலும் I

புதிய பாடத்திட்டம்- 2012

பகுதி II

பிரிவு A

**I. நுண்கலை என்றால் என்ன.**

அழகுணர்ச்சியுடையதாகவும் மெருகூட்டப் பட்டதாகவும் நுணுக்கமானதாகவும் நேர்த்தியானதாகவும் இருக்கின்ற கலைகள் நுண்கலைகள்.

நுண்கலைகள்

அவையாவன –நடனம், நாடகம், இசை, இலக்கியம், கட்டடம்,சிற்பம், ஓவியம்.

வரைவிலக்கணம்- 1 புள்ளி

மூன்றிற்கு மேற்பட்ட நுண்கலைகள் குறிப்பிடப்பட்டிருத்தல் - 1 புள்ளி

(02 புள்ளிகள்)

**II. நாடகக் கலையின் சிறப்புப் பண்புகளை விளக்குக.**

- போலச் செய்தல்
- மோதுகையைச் சித்திரிப்பது
- கணப்பிரசன்னமாவது
- முரணைச்சித்திரிப்பது
- நிகழ்த்து கலை
- செய்து காட்டுவது
- ஊடாட்டமுடையது
- பொய்மையில் மெய்மை உடையது
- தொடர்பாடல்
- எதிர்வினையைத் தூண்டுவது
- ஒன்றிணைப்பது
- இயங்கு கலை
- அரங்க வெளியை அடிப்படையாகக்கொண்டது
- பல்வேறு கலைகளையும் கலைஞர்களையும் ஒன்றிணைப்பது
- நால்வகை நடிப்புப் பயன்படுத்தப்படல் (06புள்ளிகள்)

III. ஏனைய கலைகளிலிருந்து அது எவ்வாறு வேறுபடுகிறது.

- இசை நடனத்தை நாடகத்துடன் ஒப்பிடல்
- இலக்கியத்துடன் நாடகத்தை ஒப்பிடல்
- கட்டடம், சிற்பம் ஓவியத்துடன் நாடகத்தை ஒப்பிடல்
- சினிமா , தொலைக்காட்சி, வானொலி நாடகங்களுடன் நாடகத்தை ஒப்பிடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம் தவிர்ந்த ஏனைய கலைகள் தரப்பட்டு நாடகத்தை அவற்றுடன் ஒப்பிட்டு விளக்கப்பட வேண்டும். நாடகக் கலையின் தனித்துவங்கள் குறிப்பிடப்பட வேண்டும்.

**07 புள்ளிகள்**

**(15 புள்ளிகள்)**

(1) **“ஐரோப்பிய அரங்கமரபில் திறஜெடி நாடகவகை பெரும் செல்வாக்கைச் செலுத்தி நிற்கின்றன”.**

I.கிரேக்கரங்கில் அவலச்சுவையின் தோற்றம், வளர்ச்சி பற்றி விளக்குக.

தோற்றம்

- டயனோசியஸ் சடங்கின் அடியாகத் தோற்றம்.
- டித்ராம்பிக் பாடல்கள்- றகோடியா- திறஜெடி
- பிறப்பிலிருந்து இன்பியலும் இறப்பிலிருந்து துன்பியலும் தோற்றம் பெற்றதென்ற கருத்துமுண்டு.
- தெஸ்பிஸ் இதன் தோற்றத்திற்கு உறுதுணையாக இருந்தார்

**வளர்ச்சி**

- அரியோன் , தெஸ்பிஸ் நாடகாசிரியர்கள் ஊடாக வளர்ச்சி
- ஈஸ்கலஸ், சோபோகிளிஸ், யூரிப்பிடிஸ்

இவர்களது நாடகத் தன்மை

ஒருவர் நாடகத் தன்மையிலிருந்து ஒருவர் வேறுபடும் விதம்

- கோரஸ்
- நடிகர்
- ஐதீகம்

ஈஸ்கலசின் நாடங்கள் முக்கூட்டுத் தன்மையுடையன.

உ-ம்: அகமெம்னன் ,சோபெரி,யூமென்ட்ஸ். 50 பேர் கொண்ட கோரசைப் பயன்படுத்தினார்.பாதி கவிதைப் பண்பாக இருந்தது. யுத்தம் நடந்த காலப் பகுதி . சமாகாலப் பிரச்சினைகள் முதன்மை பெற்றன. சோபோகிளிசின் நாடகங்கள் தம்முள் முழுமை உடையவை(அன்ரிகனி, ஈடிப்பஸ்)யுத்தத்தின் பின் எழுந்த நாடகங்கள். கிரேக்க விதி ,சாபம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பெற்றவை.

யூரிபிடிஸ் யுத்தம் முடிந்தபின் அதன் பாதிப்புக்கள் பற்றிய நாடகங்களை எழுதினார். உ-ம் : அன்றோமச்சி பாடகரைக் குறைத்தார்.

தோற்றத்திற்கான விளக்கம் 03 புள்ளிகள்

படிநிலை வளர்ச்சி தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் 03 புள்ளிகள்

தோற்றம், வளர்ச்சி விரிவாக விளக்கியிருத்தல் 01 புள்ளி

(09 புள்ளிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**I.** **எலிசபெத்கால இங்கிலாந்தில் சேக்ஸ்பியரின் அவலநாடகங்களின் இயல்பை விளக்குக.**

பாத்திரத்திலுள்ள ஏதோ ஒரு குறைபாடு காரணமாக அப்பாத்திரத்தின் நற்பண்புகள் நலிவடைந்து போகுதல் அவலமாகும்.

- மோதுகை
- கதைப்பின்னல்
- ஒரு பாத்திரத்தில் பல வகையான பண்புகள்
- மனித உளவியலை வெளிப்படுத்துபவை. உ-ம். ஒதல்லோ தாழ்வுச்சிக்கல்
- கட்டமைப்பு
- உத்திகள்
- (தனிமொழி, தனிக்கூற்று, புறச்சொல், வெற்றுக் கவிதை.......)
- உலகப் பொதுமையான பாத்திரங்கள்.
- எக்காலத்திற்கும் பொருத்தமானவை.

**( அவல நாடகங்களாவன ஒதெல்லோ, ஜூலியர் சீசர், உள்ளடங்கலாக ஏனையவை)**

| | |
|---|---|
| **சேக்ஸ்பியரின் பண்புகள்** | 06 புள்ளிகள் |
| நாடக சம்பவங்களுடன் உதாரணம் காட்டி விளக்கியிருத்தல் | 02 புள்ளிகள் |
| | (10 புள்ளிகள்) |
| மொத்தம் | (15 புள்ளிகள்) |

3.**"நிரந்தரமாகக் கட்டப்பெற்ற அரங்குகள் மாத்திரமின்றி தற்கால அரங்குகளும் அரங்கக் கட்டுமானத்திற்குள் அடங்குவனவாகும்".பின்வரும் அரங்குகள் பற்றி விபரிக்குக.**

**I.** மத்தியகால பூத் அரங்கு **(Booth Stage)**

சிறுகடை அல்லது பந்தல் போன்ற அமைப்புடைய அரங்கு என அழைப்பர்.

மத்திய கால அரங்கு – வெளியக அரங்கில் இது அடங்கும்.

இவ்வரங்கு கிராமங்களில் தற்காலிகமாக அமைக்கப் பெற்று மக்கள் முன்னிலையில் நடைபெறும். திருச்சபை தமது மதப் பிரசார நடவடிக்கையைக் கருத்தில் கொண்டு இவ்வரங்கைப் பயன்படுத்தியது.

ஒரு காட்சி முடிந்ததும் அடுத்த காட்சிக்காக இன்னொரு இடத்திற்கு இடமாற்றம் செய்யப்படும்.


| | |
|---|---|
| படம் வரைந்திருத்தல் | 01 புள்ளிகள் |
| படம் வரைந்து விளக்கியிருத்தல் | 04 புள்ளிகள் |
| | (05 புள்ளிகள்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II. மலையக அருச்சுனன் தபசு அரங்கு

- கோயில் முன்றலில் - திறந்த வெளியில்- மேட்டு நிலத்தில் இடம் பெறும்
  15 அடி நீளம், 15 அடி அகலம் உடைய அரங்கு
  திரை இல்லை. தபசுக் கம்பம் 60 அடி உயரமுடையது.
  தபசுக் கம்பத்தை மையப்படுத்தியே அரங்கு அமையும்.
  இதன் உச்சியில் அருச்சுனன் தபசு செய்ய பீடம்
  அமைக்கப்படும் இரவு 9 மணியிலிருந்து விடியும்
  வரை இடம் பெறும்







தீப்பந்தம் வைத்து ஒளியை ஏற்படுத்துவர்

(05 புள்ளிகள்)

III. மகிடிக் கூத்தரங்கு

- 3 வகையான மகிடிக் கூத்துக்கள்
- முதலிரண்டும் ஏட்டுப் பிரதிகள் அற்றவை
- 3வது ஏட்டுப் பிரதி உடையது.
- நீள் சதுரமான அரங்கு
- மந்திர தந்திர விளையாட்டுக்கள் உள்ளடக்கியது
- இருந்தவருக்கும் வெளி இடத்திலிருந்து வந்தவருக்கும் இடையே இடம்பெறும் மந்திர தந்திர விளையாட்டுக்கள்

4.

I. இந்திய சமஸ்கிருத அரங்கில் பேசப்படும் பத்து வகையான நாடக மரபுகளை விளக்குக.

1. நாடக - மகா நாடகம் என அழைப்பர். புகழ் பெற்ற தலைவன் தலைவி வரலாற்றைக் கூறுதல்
2. பிரகரண - ஆசிரியரின் கற்பனைக் கூடாக கதை படைக்கப்படும்.
3. ஸமவஹார – தேவர் மற்றும் அசுரர்களை சேர்ந்ததாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதுடன் பலனைப் பெறுவதற்கு பலவகை

உபாயங்களையும் பின்பற்றுவர்.

4. ஈஹாமிருக - தெய்வத் தன்மை கொண்டதாக இருப்பர்.

5. டிம - செருக்குடன் கூடிய தலைவன் வரலாற்றைக் கூறுதல்.

6. வியாயோக - புகழ் பெற்ற கதையினைக் கூறுவது.

7. பிரஹசன - நகைச்சுவை வெளிப்பட்டு நிற்கும் நாடக வடிவம்.

8. பாண - தனிநபர் நடிப்பைப் பிரதானமாகக் கொண்டது.

9. வீதி - ஒன்று அல்லது இரண்டு அங்கங்களை பிரதானமாகக கொண்டது.

10. அங்க - ஓரங்க நாடகம்

**10 நாடக வகைகள்**
**(04 புள்ளிகள்)**

**10 வகை நாடகங்களையும் எழுதி விளக்கியிருத்தல் (07 புள்ளிகள்)**

II. நடிப்பின் போது நால்வகை அபிநயங்களை எவ்வாறு பயன்படுத்துகின்றனர்? விளக்குக.

ஆங்கீக அபிநயம் - உடல் வழிச்சித்திரிப்பு

வாச்சிக அபிநயம் - குரல் வழிச்சித்திரிப்பு

ஆஹார்ய அபிநயம் - காண்பிய வழிச்சித்திரிப்பு

சாத்வீக அபிநயம் - உணர்ச்சி வழிச்சித்திரிப்பு

**நால்வகை அபிநயம் மட்டும் குறிப்பிடப்பட்டிருப்பின் 02 புள்ளிகள்**

**நால்வகை அபிநயம் பற்றி விளக்கியிருப்பின் 02 புள்ளிகள்**

**(4 புள்ளிகள்)**

**III. இந்திய சமஸ்கிருத அரங்கில் பார்வையாளர் பெறும் 'ரச உணர்வு பற்றி சித்திரிக்குக.**

நடிகர்கள் தமது மெய்ப்பாடுகள் மூலம் நாடகம் பார்ப்போருக்கு ஏற்படுத்தும் உணர்வே ரசமாகும். ரசத்தை பாவங்கள் உருவாக்குகின்றன. 02 புள்ளிகள்

**ரச பற்றி விளக்கம்**

ரச உருவாவதற்கு பாவங்கள் அடிப்படை என்பதை விளக்குதல் (விபாவ, அனுபாவ, வியாபிச்சாரி)

**உதாரணங்கள் மூலம் விளக்குதல் 02 புள்ளிகள்**

**அல்லது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது சுவைக்கப்படுகிறதோ அனுபவிக்கப்படுகிறதோ திருப்தியும் மகிழ்ச்சியும் தருகிறதோஅதுவே ரசமாகும்

- ❖ சிருங்கார - ரதி,அன்பு. காதல்
- ❖ ஹாஸ்ய - சிரிப்பு, மகிழ்ச்சி
- ❖ கருணா - சோகம்
- ❖ பயானக - பயம்
- ❖ ரௌத்திர - கோபம்
- ❖ பீபத்ஸ - அருவுருப்பு
- ❖ அற்புத - வியப்பு
- ❖ வீர - உற்சாகம்

**எட்டு ரசங்களையும் குறிப்பிட்டு உரிய பாவங்களை அட்டவணைப் படுத்துதல் 04 புள்ளிகள்**

**-(15 புள்ளிகள்)**

**5. " அரங்க கோட்பாடுகளும் நடிப்புக் கோட்பாடுகளும் காலத்தின் தேவை கருதி புதியனவாகத் தோற்றம் பெறுகின்றன".**

**(அ) ஸ்ரெனிஸ்லாவ்ஸ்கி**

அவரது அறிமுகம்

- o பழைய பாணியிலிருந்து புதிய நடிப்புப் பாணியைத் தோற்றுவித்தார்.
- o நடிப்பில் முறைமைக் கோட்பாட்டை தோற்றுவித்தார்
- o அகவயம் சார்ந்த சித்திரிப்புக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.
- o உள்ளார்ந்த உள ரீதியான நடிப்பிற்கு முதன்மை கொடுத்தார்
- o பாத்திரம் , பாத்திரமாக வாழ்தல்.
- o பார்ப்போர் நிகழ்வுடன் ஒன்றிணைந்து போதல்.
- o பயிற்சிக்கு முதன்மை வழங்கல் (1ம், 2ம், 3ம், கட்டம்)
- o வெளிவாரியான அளிக்கை முறையில் உண்மைத் தன்மை ஏற்படுத்தல்.

**04 புள்ளிகள்**

**(ஆ) மேயர் ஹோல்ட்**

- ➤ உயிர்ப் பொற்முறை நடிப்பைத் தோற்றுவித்தல்.
- ➤ உடல், குரல், உளம், உண்மைத்தன்மையைக் கண்டறிதல்.
- ➤ 1. முற்றிலும் உடல் ரீதியான நடிப்பு முறைக்கு தயார்ப்படுத்தல்.

2. அந்த நடிப்பினுடைய செய்கை

3. அதற்கு எதிரான துலங்கல்.

என்பன முக்கியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ கையாளப்பட்ட உத்தி முறைகள்

4ம் சுவரை உடைத்தல்.

திரைகளை அகற்றல்.

மேடையில் அடித்தள ஒளியைக் கையாளுதல்.

நடிகர் பார்ப்போர் நெருக்கமான உறவு 04 புள்ளிகள்

**III.அகஸ்தாப்போல் முன்வைத்த அரங்ககோட்பாடு யாது. அது ஐரோப்பிய அரங்கில் ஏற்படுத்திய மாற்றங்கள் யாவை? விளக்குக.**

- ❖ யதார்த்தம் சாராத அரங்க கோட்பாட்டாளர்.
- ❖ இவரது அரங்கு அரிஸ்ரோட்டிலின் அரங்க அழகியல் கோட்பாட்டை விமர்சித்து ஒடுக்கப்பட்டோருக்கான அழகியல் கோட்பாட்டை முன்வைக்கும் அரங்காகும்.
- ❖ ஒடுக்கப்பட்டோர் உணர்வுகள், உணர்ச்சிகளை வெளிப்படுத்த அரங்கைக் கையாளுதல்.
- ❖ உடனடி படிம அரங்கை பல வடிவங்களில் வடிவமைத்தல்.
- ❖ கண்ணுக்குத் தெரியாத அரங்கு படிமஅரங்கு, வாத விவாத அரங்கு, சிகிச்சை அரங்கு எனப் பலவகை அரங்கு முறைகளைக் கூறுதல்.
- ❖ இவர் சமூக வழிகாட்டலுக்கான செய்முறைகளை அரங்கினுடாக அமைத்தல்.
- ❖ உளவியல், தளை நீக்கத்திற்குரிய வகையில் இவருடைய நாடகங்கள் அமைதல்.

07 புள்ளிகள்

- 15 புள்ளிகள்

**6.கீழே தரப்பட்டுள்ளவற்றுள் மூன்றுக்கு குறிப்புக்கள் எழுதுக.**

**I. மூன்றின் ஒருங்கியைவு (unity of three lines)**

காலம், இடம், செயல்,

அரிஸ்ரோட்டில் தனது கவிதையியலில் குறிப்பிடுகின்றார்.

காலம் -நாடகக் கதை நிகழும் காலப் பகுதி

இடம் - நாடகத்தின் கதை நிகழும் இடம் பொருத்தமானதாக அமைய வேண்டும்.

செயல் -கதை நிகழ்ந்த போது நடைபெற்றனவும் நாடகத்தில் நடைபெறுவதும் ஒரே மாதிரியான செயலாக அமைய வேண்டும்.

**மூன்றையும் பற்றி விளக்கியிருத்தல் 03 புள்ளிகள்**

**நாடக பிரதிகளுடாக விளக்கியிருத்தல் 02 புள்ளிகள்**

-5புள்ளிகள்

**II.தொலைக்காட்சி நாடகங்கள்**

சின்னத்திரை

சின்னத்திரையானமையினால் பாத்திரங்களின் முகங்களை அண்மித்துக் காட்டல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் அங்க நாடகங்கள்

தொழில் நுட்பமுடையது

கமராவை முதன்மைப்படுத்தியது

காட்சியும் ஒலி, ஒளியும் பிரதானம்

05 புள்ளிகள்

III.காவியப் பாணி அரங்கு

- பிஸ்காட்டார் தொடக்கி வைக்க பெட்டோல்ட் பிரெ.்.க்ட் முன்னெடுத்தார்
- எபிக் தியட்டர்.
- காவிய பாணி
- இயற்பண்பு வாதத்திற்கு எதிராக முன்வைத்தல்
- அந்நியப்படுத்தல் - தூரப்படுத்தல் -பாரதீனப்படுத்தல்
- பாத்திரங்களைப் படர்க்கையில் பேசுதல்.
- இடைவெட்டி வரும் பாடல்கள்.
- உணர்ச்சி வசப்படுத்தாது பார்வையாளருக்கு அறிவூட்டி சிந்திக்க வைத்தல். 05 புள்ளிகள்

III. சீன பீஜிங் ஒபெரா

❖ பாடல், இசை முதன்மை

❖ சீன அரங்கின் பிரதான கலை வடிவம்

❖ வேடஉடை அணிவதன் மூலம் அதன் நிறங்களை வைத்து பாத்திரங்களை இனங்காணல்.

❖ கட்புலக் காட்சி கண், உடம்பு அசைவுகள் மூலம் வெளிப்படும்.

❖ டான், செங், யிங், சௌ, போன்ற வகை மாதிரிப் பாத்திரங்கள் உள்ளன.

❖ காட்சிகள் குறியீடாகக் காட்டப்படும்.

05 புள்ளிகள்

IV. பலே ஆட்டம்

❖ ஆடல் முதன்மையானது

❖ இத்தாலியில் ஆரம்பம்

❖ பிரான்சிலும் மிகப் பிரபல்யமாக உள்ளது.

❖ பாடலுக்கு ஏற்றவாறு உடல் அசைவுகளுக்கூடாக உணர்ச்சிகள் வெளித் தெரியுமாறு ஆடுவர் (05 புள்ளிகள்

(3x5=15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடகமும் அரங்கியலும் II- 2012 ஓகஸ்ற்

### பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1. - 3 | 11. - 5 | 21. - 4 | 31. - 4 |
| 2. - 2 | 12. - 1 | 22. - 3 | 32. - 1 |
| 3. - 3 | 13. - 3 | 23. - 1 | 33. - 5 |
| 4. - 2 | 14. - 1 | 24. - 2 | 34. - 5 |
| 5. - 2 | 15. - 3 | 25. - 4 | 35. - 3 |
| 6. - 1 | 16. - 3 | 26. - 2 | 36. - 2 |
| 7. - 3 | 17. - 5 | 27. - 5 | 37. - 5 |
| 8. - 1 | 18. - 1 | 28. - 1 | 38. - 5 |
| 9. - 2 | 19. - 5 | 29. - 4 | 39. - 3 |
| 10 - 4 | 20. - 2 | 30. - 4 | 40. - 1 |

## நாடகமும் அரங்கியலும் II 2012 ஓகஸ்ற்

### பகுதி II

### பிரிவு A

**1. "வில்லியம் சேக்ஸ்பியர் தனது நாடகங்களினூடாக என்றென்றும் பொருந்தி நிற்கும் உலகப் பொதுமையான மனித இயல்புகளை எடுத்துக் கூறுகின்றார்".**

**i. யூலியஸ் சீசர் நாடகத்தில் வரும் பிரதான மோதுகை யாது?**

-அரசியல் கொள்கை பற்றிய முரண்பாடு

-அதிகாரப் போட்டி தொடர்பான முரண்பாடு

-நட்புக்கு அப்பாலான கொள்கை சார் முரண்பாடும் மானிடப்பிணைப்பின் முரண்பாடும்

-சீசரின் செல்வாக்கு குவிப்பும் சர்வாதிகாரப் போக்கும் புறூட்டஸ் அந்நிலைமைகளால் முரண்படுகின்றமை.

-சீசருக்கு ஏற்பட்ட செல்வாக்கு அதிகாரம் போன்றமை கஸியஸ் போன்றோருக்கு அதிகாரப்போட்டி மனப்பாங்கைத் தோற்றுவித்தமை.

-சீசருக்கும் புறூட்டஸ்சுக்கும் இடையிலான மானிடப்பிணைப்பு கொள்கைகளால் முரண்பட்டு எதிரிகளாக்கும் பண்பு.

**யூலியஸ் சீசர் நாடகத்தில் வரும் பாத்திரங்களை இனங்கண்டு குறிப்பிடுதல்**

யூலியஸ் சீசர், புறூட்டஸ், கசியஸ், கயஸ்கா,மார்க் அன்ரனி, லெபிடஸ், ஒக்ரேவியஸ் சீசர், கலிபோர்னியா **(03 புள்ளிகள்)**

**மோதுகைகளை நாடக பாடத்துடன், உதாரண முன்வைப்பின் மூலம் தருதல்**

உ-ம் சதிகாரர் உரையாடல், அன்ரனியின் பேச்சு **(02 புள்ளிகள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ii. யூலியஸ் சீசர் நாடகத்தினுடாக என்றென்றும் பொருந்தி நிற்கும் மனித இயல்புகளைச் சேக்ஸ்பியர் எவ்வாறு எடுத்துக் கூறுகின்றார் என்பதை விளக்குக.**

❖ என்றென்றும் பொருந்தி நிற்கும் நாடக இயல்புகளை சேக்ஸ்பியரின் யூலியஸ்சீசரினுடாக இனம் கண்டிருத்தல்.

- அதிகார வெறி
- அரசியல் கொள்கையினால் மனித எதிரிகள் உருவாக்கப்படுகின்றமை.
- கொள்கை முரண்பாடுகளால் நெருக்கடிக்குள்ளாகி தவறிழைக்கும் மனித இயல்புகள்.
- ஒரு மனிதனை வீழ்த்துவதற்கு மேற்கொள்ளும் சதிகள், சதிகாரர்கள்.
- ஒன்றை நினைக்க இன்னொன்று நடந்து நிலைமையின் போக்கை மாற்றி விடுதல்.
- மனிதர்களிடம் காணப்படும் அலட்சியப்போக்குகள் அழிவுக்கு ஆளாகுதல்.
- பழிக்குப் பழி வாங்கியமை
- **வெவ்வேறுபட்ட எக்காலத்திற்கும் பொருத்தமான இயல்புகளை குறிப்பிடுதல்**

உ-ம் -வன்முறைக் களியாட்டம் போன்றவற்றில் உரோமர்களும் இங்கிலாந்தின் பார்வையாளர்களும் அலாதி விருப்பம் காட்டினர்.

-இயற்கை தெய்வீக ஒழுங்கு முறையில் உரோமர்கள் நம்பியிருந்ததுபோல அண்டகோளம் அனைத்தும் இயற்கையுடனும் தெய்வங்களுடனும் அறிவுசார் அமைப்புடனும் சட்ட ஒழுங்குகளிலும் ஏதாவது ஒன்று பிகினால் குழப்பம் தோன்றி அமைதி குலையுமென சேக்ஸ்பியர் காலத்துப் பார்வையாளர்களும் பொது மக்களும் நம்பியது போன்று இன்று நாமும் நம்புகிறோம். **05 புள்ளிகள்**

- **இனம் கண்ட இயல்புகளை யூலியஸ்சீசர் நாடகப் பாத்திரங்களுடன் இணைந்து எக்காலத்திலும் எக்காலத்திலும் காணலாம் என நிரூபித்தல் 03 புள்ளிகள்**
- **சமகால உதாரணங்களுடன் அல்லது வரலாற்றுக் கதை மாந்தர்களுடன் ஒப்பிட்டு சேக்ஸ்பியர் ஆக்கத்திறனை வெளிப்படுத்தியித்தல்**

-நம்பிக்கைகள், சடங்குகள், மானுட உறவுகள் **02 புள்ளிகள்**

**2. "ஐரோப்பிய அரங்கில் ஹென்றிக் இப்சனுடன் யதார்த்தவாதம் முழுமையடைந்து விட்டது" என்பர்.**

**i. அரங்கில் யதார்த்தவாதம் என்பது எவ்வாறு அமைகிறது?**

- உள்ளதை உள்ளவாறு எடுத்துக் கூறுவதுடன் அகத்தே இருக்கின்ற உண்மையினையும் அதன் பின்புலத்தையும் எடுத்துக் கூறுவது.
- தெரிவு, தொகுப்பு, பகுப்பாய்வு போன்ற விடயங்களுக்கு முதன்மை கொடுத்தல்.
- நாடகக் கதை, மொழி. உடை. ஒப்பனை, மேடைப்பொருட்கள். காட்சி என்பன வாழ்க்கையை ஒத்ததாகக் காணப்படல்.
- யதார்த்த அரங்கின் இப்சன்,செக்கோவுக்கு முதன்மையான பங்குண்டு.
- நன்கமைக்கப்பட்ட நாடக முறைமையைப் பின்பற்றல்.(well made play-Jujin ஆரம்பம், வளர்ச்சி,திருப்புமுனை,உச்சம், வீழ்ச்சி,முடிவு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நான்காவது சுவராக பார்வையாளரைக் கொள்வது (Forth wall theory)
- நடிப்பில் முறைமைக் கோட்பாடு முக்கியத்துவம் பெறல்.

**யதார்த்த வாதம் என்னவெனக் கூறல் 02 புள்ளிகள்**

**அளிக்கை முறையில் உண்மைத் தன்மை இருப்பின் 03 புள்ளிகள்**

**ii. இப்சனின் 'பொம்மை வீடு' நாடகத்தினுடாகத் தெரிய வரும் பிரதான முரண்பாட்டைச் சித்திரித்துக் காட்டுக.**

நோறாவின் சிந்தனைப் போக்கிற்கும் ஹெல்மரின் சிந்தனைப் போக்கிற்கும் வேறுபாடு காணப்படுவது பிரதான மோதுகைக்கான காரணம். இதன் அடிப்படையில் தான் புரிந்துணர்வின்மை வளர்த்தெடுக்கப்படுகிறது என்பதை நாடக சம்பவங்கள் ஊடாக விளக்கல்.

**iii. ஒவ்வொரு பாத்திரங்களின் இயல்புகளைச் சித்திரிக்குக**

ஹெல்மர்

ஆணாதிக்கம்

தன்முனைப்பு

தன்னுடைய சுயதனித்துவத்தில் மட்டும் கவனம் செலுத்துபவன்

கௌரவ வாழ்க்கை முறை

நோறா

தன்னைப் பற்றி மாத்திரம் இன்றி தனது குடும்பத்தைப் பற்றியும் சிந்தித்தல்

சராசரி வாழ்க்கையுடன் கூடிய சராசரிப் பெண்ணாக விளங்குதல்

இறுதி சந்தர்ப்பத்தில் சுயமான தன்மையுடன் முடிவெடுக்கக்கூடியவாக மாறுகிறாள்.

கிறிஸ்ரினா

தன்குடும்பத்திற்காக தன்னை தியாகம் செய்தவள்

**பிரதான மோதுகை பற்றி விளக்குதல் 05 புள்ளிகள்**

**மோதுகைக்காக சூழ்நிலைகள் பற்றி விளக்கியிருத்தல் 05 புள்ளிகள்**

3. **"காளிதாஸர் எழுதிய நாடகங்களுள்ளே சிறந்த நாடகமாக அபிக்ஞான சாகுந்தலத்தைக் குறிப்பிடுவர்".**

**i. இந்நாடகத்தில் வரும் பிரதான பாத்திரங்கள் யாவை?**

துஸ்யந்தன் சகுந்தலை துருவாசர் கண்ணுவர்

அனசுயை பிரியம்வதை **(03 புள்ளிகள)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ii. ஒவ்வொரு பாத்திரங்களினதும் இயல்புகளைச் சித்திரிக்குக.**

**துஸ்யந்தன்**

மன்னன் வேட்டையபடுவதில் வல்லவன். மற்றவரை மதிக்கும் குணம் உள்ளவன்.

அழகானவன். பிள்ளைகளிடம் விருப்பம் உள்ளவன்

இறைபக்தி உடையவன் நாட்டு மக்களின் நலம் பேணுபவன்காதலின்
பால் நாட்டமுடையவன்

**சகுந்தலை**

அழகானவள் தன்னைச் சார்ந்தோரில் மிகுந்த விருப்புடையவள்

இயற்கையை நேசிக்கும் அன்புடையவள் பறவை, மிருகங்களிடம் அன்பானவள்

சூழலுக்கு ஏற்ப சமாளிப்பவள்

**கண்ணுவர்**

மகளிடம் மிகுந்த அன்புடையவர் மகளின் விருப்பத்தை மதிப்பவர்

**துருவாசர்**

முற்கோபக்காரர்

**அனசூயை, பிரியம்வதை**

தம் தலைவி மீது அளவில்லா அன்புடையவர்கள்

தலைவியின் நல் வாழ்வில் விருப்புக் கொண்டவர்கள்

சகுந்தலையைத் தம் தலைவனிடம் சேர்த்து சந்தோசமாக அவள் வாழ வேண்டும் என்ற விருப்பமுடையவர்கள்

**iii. சமஸ்கிருத நாடகங்களின் பொதுவான பண்புகளுடன் இந்நாடகம் ஒத்துப்போவதை உதாரணங்களுடன் விளக்குக.**

- ஆரம்ப அறிமுகமாக பூர்வ அரங்கம் நிகழ்த்தப்படல்
- நாடகம் 5 வளர்ச்சிக் கட்டங்கள்

ஆரம்ப, பிரயத்தன, பிரத்தியாச, நியாதாப்தி, பலாகம

உதாரணங்களுடன் விளக்குதல்

- கதைப்பின்னல் பீஜ, பிந்து, பதாக. பிரகரி, கார்ய
- கதாநாயகன், கதாநாயகி பெயர்கள் நாடகத் தலைப்பாதல்
- பிரதான சுவையாக சிருங்காரம் காணப்படுதல்
- தன்னிகரில்லாத் தலைவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பறவை, விலங்குகளை நாடக உத்தியாக்கல்
- புராண இதிகாச கதைகளை கருவாகக் கொண்டிருத்தல்
- இன்பியல் முடிவு
- உயர்ந்த மொழி( சமஸ்கிருதம்) உயர் பாத்திரங்கள் பேசும்.
- சாதாரண மொழி( பிராகிருதம், பைசாசம்) சாதரண பாத்திரங்கள் பேசும்.
- விதூசகன் எனும் கோமாளிப் பாத்திரம் தோன்றுதல் **07 புள்ளிகள்**

**4. "தமிழ்ப் பாரம்பரியத்தின் அரங்க ஊற்றுக்களைக் கூத்து ஆற்றுகைகளில் காணலாம்"**

**i.** **ஆடல்பாடல்களுடாகக் கதையை வெளிக் கொணர்வது கூத்தாகும்.**
'அலங்காரரூபன் நாடகத்தை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.
மரபுவழிக் கூத்தில் அண்ணாவியரின் பங்களிப்பு யாது?

-கூத்து என்ற பதம் ஆடலைக் குறிக்கும். ஆடுதல், பாடுதல் ஊடாக கதை சொல்லும் பாரம்பரிய வடிவமே கூத்து.

-பாத்திரப் பண்புகள், -சம்பவங்கள், அழகியல் ஆடற் கோலங்கள்,

கதை, முரண், -காட்சிச் சூழல்'

**என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கூத்தின் இயல்புகள் விளக்கப்பட்டிருத்தல்**

04 புள்ளிகள்

- ❖ கட்டியக்காரன், செகதனையாளி, அதிவீரசூரன், அலங்காரரூபன். அலங்காரரூபி,.... போன்ற ஒவ்வொரு பாத்திரங்களுக்கு வரவுத் தருக்களும் ஆடற்கோலங்களும் உள்ளன. அவை அவ்வப்பாத்திரங்களின் இயல்புகளைக் காட்டுவனவாக உள்ளன.
- ❖ அலங்காரரூபன் - இளவரசனாக, விறகுதலையனாக, செட்டியாக, வெவ்வேறு பாத்திரங்களை ஏற்கும் போது வெவ்வேறு ஆடல். பாடல் காணப்படும்.
- ❖ கூத்தின் கதை சபைத் தருக்களால் சம்பவங்களால் நகர்த்தப்படும்.
- ❖ அதிவீரசூரனுக்கும் செகதனையாளிக்குமான போர், சண்டைத் தருக்களால் ஆடற் கோலங்களால் சித்திரிக்கப்படுகின்றமை.
- ❖ செகதனையாளி கொலு போன்றவை அழகியல் உணர்வை வெளிப்படுத்துபவை.

**இப் பண்புகள் அலங்காரரூபன் கூத்தினுடாக நோக்கல்** 03 புள்ளிகள்.

**ii.** மரபு வழிக் கூத்தில் அண்ணாவியரின் பங்களிப்பு யாது?

- ➢ கூத்துக்களில் ஆடல், பாடல் பயிற்றுவிப்பவர் அண்ணாவியார்.
- ➢ மரபு வழி பிசகாது கூத்தினை உருவாக்குபவர்
- ➢ மேடையில் நின்று சபையோருடன் இணைந்து கூத்தினை நகர்த்துபவர்

**எண்ணக்கரு விளக்கம்** 01 புள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ கூத்தின் ஆடல் பாடல்களை மரபு வழி பிசகாத வழியில் பயிற்றுதல்.

❖ பாத்திரங்களை திறமைக்கேற்ப பரம்பரையாகத் தெரிவு செய்தல்.

❖ ஒத்திகை நடாத்துதல்.( தினம், .கிழமை, அடுக்குப் பார்த்தல்)

❖ எல்லா மூலகங்களுடனும் அடுக்குப் பார்த்தல்.

❖ ஆடல் , பாடல்களூடாக ஒருங்கிசைவினை ஏற்படுத்தல்.

❖ அரங்கில் காப்புப் பாடி கூத்தினை ஆரம்பித்தல்.

❖ சபைத்தரு பாடல்களை சபையுடன் இணைந்து பாடுதல்.

❖ சல்லாரி பாவித்தல்.

❖ மத்தளம் வாசித்தல்.

❖ கூத்தின் கதையை நகர்த்திச் செல்லுதல்.

❖ மங்களம் பாடுதல். **03புள்ளிகள்**

**iii. கூத்து அளிக்கையில் பார்ப்போர் பங்குகொள்வது என்பது ஒரு அழகியல் அம்சம் ஆகும். என்பதை ஏற்றுக்கொள்கிறீரா? கருத்துரைக்க.**

ஆம். பின்வரும் செயல்களில் பார்ப்போர் ஈடுபடுதலானது கூத்து அளிக்கைக்குள் அவர்களும் உள்ளடக்கப்பட்டிருத்தல்.

➢ சூழலைத் தோற்றுவித்தல்

➢ பந்தங்களுக்கு எண்ணெய் ஊற்றுதல்

➢ பந்தம் பிடித்தல்

➢ திரை பிடித்து நடிகரை அழைத்து வரல்.

➢ பாத்திரங்கள் மேடைக்கு வரும் பொழுது வெடி கொளுத்துதல், மலர் மாலை, வடை மாலை அணிவித்தல், பணம் கொடுத்தல்.

➢ எதிர்வினைகளைத் தோற்றுவித்தல். (கை தட்டுதல், சேர்ந்து பாடுதல்)

➢ வட்டமாக அமர்ந்திருக்கும் முறைமையினுடாக ஆற்றுகையைத் தீர்மானிப்பவராவர்.........

**02 புள்ளிகள்**

சில பங்குபற்றுதல்கள் கூத்தின் அழகியல் அம்சங்களுக்குப் பாதகமாக அமையும் என்பதை விபரித்தல்.

மாலை அணிவித்தல்கள்- பாத்திரப் பண்புகளைக் குழப்புவதாக அமையலாம். கதை நிகழ்வைத் தடை செய்யலாம்........... **02 புள்ளிகள்**

**5. இலங்கைத் தமிழ் அரங்கில் 1970 களின் பிற்பகுதியில் ஆரம்பிக்கபெற்ற பின்வரும் அரங்க நிறுவனங்கள் பற்றி குறிப்புக்கள் வரைக.**

**i. நடிகர் ஒன்றியம்**

- 1970களில் தேசிய மரபை தமிழ் மக்களுக்காக உருவாக்கும் முயற்சியை மேற்கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நா. சுந்தரலிங்கம், தாசீசியஸ், சிவானந்தன், இளைய பத்மநாதன், மௌனகுரு போன்றோர்களால் உருவாக்கம் பெற்றது.

- நெல்லியடி அம்பலத்தாடிகள் குழு, மட்டக்களப்பு நாடகசபா, கூத்தாடிகள் குழு,எங்கள் குழு இணைந்து தோற்றம் பெற்றது.

- மரபு வழி நாடகங்கள், மோடிமை நாடகங்கள், அபத்த சாயல் நாடகங்கள், மொழி பெயர்ப்பு நாடகங்கள் எனப் பல நாடக வகைகளை நெறிப்படுத்தியமை.

- நாடகப்பயிற்சிகள், கலந்துரையாடல் போன்றவற்றை நடாத்தியமை.

  பார்வையாளரிடம் நாடக ரசனையின் தரத்தை அதிகரித்தமை.

- 1976 ல் இரசிகர் அவை உருவாக்கப்பட்டது. **05புள்ளிகள்**

### ii. நாடக அரங்கக் கல்லூரி

- 1979 ல் குழந்தை ம. சண்முகலிங்கத்தால் ஸ்தாபிக்கப்பட்டது.
- சுய ஆக்க நாடகங்களைத் தயாரித்தமை.
- நாடக பயிற்சி வகுப்புக்கள், கருத்தரங்குகள், நாடகப் பட்டறைகளை நடாத்தியமை
- அரங்கம் சஞ்சிகையை வெளியிட்டமை.
- ரசிகர் அவையைத் தோற்றுவித்தமை .
- பல்வேறு நடிகர்கள் , நாடக ஆசிரியர்கள்,நெறியாளர்களை உருவாக்கியமை.
- சிறுவர் நாடகம்,பாடசாலை நாடகம்,சமூக நாடகம் , கூத்துருவாக்கநாடகம்,நடன நாடகம், இசை நாடகம்,பா நாடகம் , தெருவெளி நாடகம் எனப் பலவகை நாடகத் தயாரிப்பு.
- இன்றுவரை நாடகங்கள் நடாத்துகின்றமை. ('கூடிவிளையாடு பாப்பா' தொடக்கம் 'கண்டனன் சீதையை' வரை) 05புள்ளிகள்

### iii. அவைக் காற்று கலைக் கழகம்

- 1980களில் க. பாலேந்திரா, நிர்மலா நித்தியானந்தன். மு. நித்தியானந்தன், ஏ.ஜே கனகரத்தினா ஆகியோரால் உருவாக்கம்.
- மொழிபெயர்ப்பு நாடகங்களில் கவனம் செலுத்தியமை.
- யுக தர்மம், கண்ணாடி வார்ப்புக்கள்,ஒரு பாலை வீடு , தலைவர், இடைவெளிகள் போன்ற நாடகங்கள் தயாரிக்கப்பட்டமை.
- இன்றும் லண்டனில் பாலேந்திரா தொடர்ந்து பணிகளைச் செய்து வருகிறார். 05புள்ளிகள்

**6.சிங்களப் பாரம்பரிய அரங்கில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும் பின்வரும் அரங்க வடிவங்கள் பற்றி குறிப்புக்கள் வரைக.**

**I. தொவில்**

- கரண அரங்குகளில் ஒன்று • பிசாசோட்டும் சடங்கு
- நோயாளி, பிசாசோட்டுபவர், பார்ப்போர்.இதில் தொடர்புபடுகின்றனர் • சடங்கில் நாடகத்தன்மை விரவிக் காணப்படுகிறது.
- தமிழில் கழிப்புச் சடங்குடன் தொடர்புடையது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**II.** ரட்டயக்கும

- இலங்கையின் தென் மாகாணத்தில் ஆடப்படுவது.
- பெண்களின் மலட்டுத் தன்மையைப் போக்க , கர்ப்பிணிப் பெண்களை பாதுகாக்க சுகப்பிரசவம், குழந்தைவரம் ஆகியவற்றை வேண்டி நிகழ்த்தப்படும் கரணம்.
- வளங் கொடுக்கும் சடங்கு
- வீதிய எனும் பலிபீடத்தில் நிகழ்த்தப்படும். மல்மடுவ அரங்கு பூங்குடிசை.
- ஏழு மலட்டு ராணிகளின் ஆடல், பாடல்கள் ,செய்கைகள், வேடப்புனைவு போன்ற நாடகத் தன்மை வாய்ந்தமை.

**III.** சன்னியக்கும

- சன்னியக்கும என்பது பிசாசை ஓட்டும் கரணம்
- ருகுணு பிரதேச பிரதான சாந்திச் சடங்கு.
- பல நோய்களைத் (தொண்டைப்புண், தொண்டை வீக்கம், மூட்டு வீக்கம், வயிற்று வலி, மனக்குழப்பம், கண் நோய்,காது நோய் , வாய்க்கோணல் நோய்) தீர்க்கும் என்ற நம்பிக்கையில் நடத்தப்படுவதாகும்.
- ஒவ்வொரு நோய்களையும் குறிக்க ஒவ்வொரு வேடமுகம்

  உ-ம்- குருட்டுச் சன்னி, செவிட்டுச் சன்னி, அமுக்கு சன்னி, முடச் சன்னி, ஊமைச் சன்னி, விசர்ச் சன்னி
- 18 பிசாசுகளின் வருகை முதன்மையானது.
- சூனியம் எனும் பெண் பிசாசு மூன்று வேடங்களைத் தாங்கும் (யுவதி,கர்ப்பவதி, தாய்).
- நாடகத்தன்மை பொருந்தியது.

  -வேடப்புனைவு, பாடல், ஆடல் , சொல்லாடல், நடிப்பு
- பின்னணி இசை - ருகுணு பிரதேச மேளம்(யக் மேளம்,தொவால மேளம்), சலங்கை
- மாத்தறை,பெந்தறை ஆகிய இரண்டு மரபுகளின்படி நடத்தப்படுகிறது.

**IV.** கோலம

- கரண அரங்குகளில் ஒன்று
- வேடமுகப்பாவனை காணப்படும்.
- தாழ் நாட்டு கரையோரப் பிரதேசங்களில்(களுத்துறை தொடக்கம் மாத்தறை வரையான) ஆடப்படுகிறது. அம்பலாங்கொட கலை எனப்படுகிறது.
- மகாசம்பத அரசியின் மசக்கையைத் தணிப்பதற்காக இது ஆடப்பட்டதனடியாகத் தோன்றியது.
- பாடல், ஆடல் , சொல்லாடல், நடிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தானயம்பல( வாடி வீட்டு முன்றல்) எனும் அரங்கில் நிகழ்த்தப்படுகிறது.
- ஆண்கள் மட்டும் நடித்தனர்.
- 53 பாத்திரங்கள் காணப்படும்.

  உ-ம் : போர் வீரன், சிப்பாய், பறங்கித் தம்பதி, நாய்,நரி..
- கட்டியக்காரனால் (காரிய கரவணரால) பாத்திரங்கள் அறிமுகப்படுத்தப்படும்.
- கொண் கொட்டி கத்தாவ, சந்த கிந்துரு கத்தாவ, மனமே கத்தாவ, கம கத்தாவ, கோடாயிம்பற கத்தாவ போன்ற கதைகள் ஆடிக்காட்டப்படும்.
- நகைச்சுவை, நையாண்டித்தன்மை கொண்ட நாடக வடிவம்.
- கதுறு என்னும் பாரம் குறைந்த மரத்தில் வேடமுகம் செய்யப்படும்.
- தமிழில் வசந்தன் கூத்துடன் ஒப்பு நோக்கலாம் என பேராசிரியர் சி.மௌனகுரு குறிப்பிடுகிறார்.

**V. சொக்கரி**

- நாட்டார் ஆடல் பாடல் கொண்டது.
- ஆடுகளம் களத்து மேடு ஆகும்.
- எளிமையான வேட முகங்கள் பயன்படுத்தப்படும்.
- பத்தினித் தெய்வத்துடன் தொடர்புடையது.
- செழிப்பு, சௌபாக்கியம் கருதி விவாய சமூகங்களில் நடாத்தப்படுகிறது.
- மலைநாட்டுப் பிரதேசங்களில் ஆடப்படுவது.
- குருநான்சே பாத்திரங்களை அறிமுகம் செய்து பாத்திரங்களுக்குரிய பாடல்களைப் பாடுவார்.
- குருகாமி, சொக்கரி, பறையா, வேதமாத்தையா போன்ற பாத்திரங்கள்.
- பாடல். ஆடல்,சொல்லாடல், ஊமம் போன்ற நாடகத் தன்மையுடையது.
- தமிழில் மகிடிக் கூத்துடன் ஒப்பு நோக்கலாம் என பேராசிரியர் சி.மௌனகுரு குறிப்பிடுகிறார்.

(5x3 =15 புள்ளிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடகமும் அரங்கியலும் I -2011 ஓகஸ்ற்

பகுதி- I

| | | | |
|---|---|---|---|
| 1. 3 | 11. 4 | 21. 1 | 31. 3 |
| 2. 3 | 12. 2 | 22. 4 | 32. 5 |
| 3. 2 | 3. 3 | 23. 2 | 33. 1 |
| 4. 1 | 14. 5 | 24. 2 | 34. 5 |
| 5. 3 | 15. 3 | 25. 2 | 35. 2 |
| 6. 4 | 16. 3 | 26. 4 | 36. 3 |
| 7. 3 | 17. 4 | 27. 2 | 37. 3 |
| 8. 4 | 18. 4 | 28. 5 | 38. 2 |
| 9. 2 | 19. 3 | 29. 3 | 39. 3 |
| 10 4 | 20. 1 | 30. 3 | 40. 4 |

## நாடகமும் அரங்கியலும் I - 2011 ஓகஸ்ற்

### பகுதி II

1.

I. சடங்கின் நிகழ்த்துகை முறையும் அதன் தனித்துவங்கள் பற்றியும் எடுத்துக் கூறி நம்பிக்கையே சடங்கின் பிரதானம். சடங்கில் மக்கள் வைத்துள்ள நம்பிக்கை இழக்கப்படும் போது கலை ரசனை மேலோங்கும் முறைமையினை எடுத்துக் கூறல்.
(04 புள்ளிகள்)

II. சடங்கின் பின்வரும் வளர்ச்சிப் படிநிலையினை எடுத்துக் கூறல்

- ❖ மதகுருவே தெய்வமாக அபிநயித்து ஆடும் சமயச் சடங்கு
- ❖ மதகுரு இயக்க இன்னொருவர் தெய்வமாக அபிநயத்து ஆடும் சமயச் சடங்கு.
- ❖ ஐதீக கதைகளை அடிப்படையாகக் கொண்ட சமயச் சடங்கு.
- ❖ நாடக நிகழ்வுகள் தனியாகப் பிரியத் தொடங்கிய சமயச் சடங்கு.

(05 புள்ளிகள்)

III. டயோனிசியஸ் சடங்கின் நிகழ்த்துகை முறை பற்றிய விளக்கம் (02 புள்ளிகள்)

டயோனிசியஸ் சடங்கிலிருந்து நாடகம் உருவாக்கம் பெறும் முறைமையினையும் அதனூடாக நடிகர்களது தோற்றத்தினையும் எடுத்துக் கூறி விளக்கல்.
(04 புள்ளிகள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.

I. - கவிதையியல் (01 புள்ளி)

-அவல நாடகத்திற்குரிய பண்புகளை எடுத்துக் கூறுகின்றது.

II அரிஸ்ரோட்டில் குறிப்பிடும் அவல நாடகத்திற்குரிய ஆறு பண்புகளையும் எடுத்துக் கூறல்.

- கதைப்பின்னல்
- பாத்திரம்
- சொல்லாடல்
- சிந்தனை / கருத்து
- பெருங்காட்சி
- இசை

**கதைப்பின்னல்**

அரிஸ்ரோட்டில் குறிப்பிடும் அவல நாடக உறுப்புக்கள் ஆறிலும் மிகவும் இன்றியமையாததாக காணப்படுவது கதைப்பின்னல் ஆகும் அவலநாடக கதைப்பின்னல் என்பது மனிதனுடைய பண்பு, சிந்தனை எனும் இரண்டினையும் இரண்டின் அடிப்படையில் விளையும் என கூறப்படுகின்றது. அரிஸ்ரோட்டில் மனிதனுடைய செயல் அல்லது வினைநிகழ்ச்சியை கதைப்பின்னலாகக் கருதுகிறார். கதைப்பின்னலானது நிஜமாக நடக்கக் கூடிய அல்லது நடந்தது என்று கருதக்கூடிய ஒன்றின் ஒழுங்கமைப்பிலேதான் நாடகத்தினது கவர்ச்சியும் விறுவிறுப்பும் அமைந்திருக்கும்.

அவல நாடகம் மனிதனைப்பற்றியதல்ல அவனுடைய செயல்பற்றியதாகும். மனிதனது இன்ப துன்பங்கள் பற்றியது. மனிதனின் செயல்கள்தான் அவனுடைய இன்ப துன்பங்களுக்கு அடிப்படையாக அமைகின்றது. இதனால் அவல நாடகத்தின் குறிக்கோள் மனித செயற்றிறன்களை முறைப்படி கோர்த்து அவற்றால் மனிதனுக்கு ஏற்படும் விளைவுகளை படைத்துக் காட்டுவதே என கொள்கின்றோம்.

சில நாடகங்களில் பாத்திரங்களின் உரையாடல்கள் மிகவும் கவர்ச்சியாகவும் இனிமையாகவும் அமைந்து அவற்றின் குணநலன்களை வெளிப்படுத்துகின்றன. இவ்வகைப் படைப்பிலே யாப்பமைதியும் சொல்லாட்சியும் கருத்துச்செறிவும் திறம்பட அமைந்திருப்பினும் அவல நாடகத்தின் விளைவாகிய அவலச்சுவைபட இவற்றால் மட்டும் உண்டாக்கிவிடமுடியாது. இதற்கு கதைப்பின்னல் இன்றியமையாதது.

எம் உள்ளங்களை ஈர்த்து உணர்ச்சிகளை செம்மைப் படுத்துவதற்கு துணைபோகும் எதிர்த்திருப்பம் (Peripety) தெளிவு (Discovery) ஆகிய இரண்டும் கதைப்பின்னலினது கூறுகளாகும் எனவே கதைப்பின்னல் உயிர்நாடியாகும்.

**பாத்திர உருவாக்கம்**

மனிதனின் செயல்களைச் சித்திரித்துக் காட்டுவதுதான் அவல நாடகத்தின் தலையாய நோக்கமாகும். நிகழ்ச்சிக் கோவையை அதாவது தொடர்ந்து நிகழ்வனவாக மக்களின் மீது சாத்தியே படைக்க வேண்டும் எனவே மானிட நிகழ்ச்சிகளைப் படைப்பதற்குத் துணையாகத்தான் பாத்திரப் படைப்பு இடம் பெறுகின்றது.

பாத்திர உருவாக்கம் என்பது அந்தப் பாத்திரம் எது எதைச் செய்யும் எது எதைப்பேசும் என்பதைப்பற்றிய தொழிற்பாட்டாக்கமாகும். பாத்திரங்களின் குண நலன்களையும் வெறுமையில் படைக்க இயலாது. மனித செயல்களின் மூலமே அவை வெளிப்படுத்தப்படும். ஆதலினால் பாத்திரப்படைப்பும் அதன் வெளிப்பாட்டிற்கு செயல் படைப்பையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. அதாவது செய்கை மூலம் பாத்திரத்தினுடைய தன்மை அல்லது அமைப்பு முறை வெளி வருகின்றது.

பாத்திரங்கள் ஓர் குறிப்பிட்ட தன்மையினவான நிலையிலே எமக்கு அறிமுகம் செய்து வைக்கப்படுகின்றன. ஒரு காத்திரமான நாடகத்திற்கு மோதுகை இன்றியமையாதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவல நாடக பாத்திரங்கள் தனது செயல்களில் அச்சம் இரக்கம் ஆகிய அவலச் சுவைகளை ஊட்டுவனவாக அமைய வேண்டும். அவல பாத்திரங்கள் நண்பர்களாகவோ பகைவர்களாகவோ அமையலாம். ஓரே குடும்பத்திலுள்ளவர்கள் தமது உறவுகளை அழிப்பதாக அமையும்போதுதான் பார்ப்போரிடத்தில் அச்சமும் இரக்கமும் தோன்றும்.

**சொல்லாட்சி**

அவல நாடகத்தின் நான்காவது உறுப்பு 'சொல்லாட்சி' ஆகும். பாத்திரங்களின் கருத்தை வெளிப்படுத்தும் பேச்சும் பாடலும் தான் சொல்லாடல் எனப்படும். சொற்களின் பொருள் உணர்த்தும் திறன் அறிந்து அவற்றால் கருத்தை வெளிப்படுத்தும் திறனைத்தான் சொல்லாட்சி எனக் கருதுகின்றனர். செய்யுள் உரைநடை ஆகிய இரண்டு வடிவிலும் இச் சொல்லாட்சியின் திறன் வெளிப்படும்.

நாடகம் ஏதோ ஒரு வகையில் சிலதகவல்களை தரவேண்டும். இத்தகவல்கள் மூலம்தான் நாடகத்தினுடைய ஓட்டத்தை நாங்கள் அறிந்து கொள்கின்றோம். பாத்திரங்கள் என்ன நினைக்கிறார்கள் அடுத்து என்ன செய்யப் போகிறார்கள் என்பன எல்லாம் இச்சொல்லாடல் மூலம்தான் நமக்குத் தரப்படும். சொல்லாடலும் அதன் தன்மையும் பாத்திரங்களின் தன்மையை வெளிப்படுத்துவனவாக அமையும். அதாவது ஒரு பாத்திரம் பயன்படுத்தும் சொல்போல இன்னோர் பாத்திரம் பயன்படுத்தாது. ஒரு குறிப்பிட்ட சூழலில் அல்லது உணர்ச்சி நிலையில் ஒரு பாத்திரம் எவ்வாறு தன்னுடைய உணர்ச்சி நிலைகளை வெளிப்படுத்தும் என்பது பாத்திரத்திற்குப் பாத்திரம் வேறுபடும். இதன் மூலம் பாத்திரங்கள் புலப்படும். இச்சொல்லாடல் பார்ப்பவருடைய கவனத்தை நாடகத்தின்பால் ஈர்ப்பதாக அமைதல் வேண்டும். நாடகத்தினுடைய அடிப்படைப் பொருளை வெளிக்கொணர்வதும் இந்தச் சொல்லாடல்தான். அத்துடன் லயத்தை தீர்மானிக்க உதவும்.

**கருத்து/ சிந்தனை**

அவலச்சுவை இலக்கணங்களில் மூன்றாவதாகக் கொள்ளப்படுவது 'கருத்து' அல்லது 'சிந்தனை'யாகும். அதாவது காலமும் இடமும் பொருந்துமாறு நாடக சம்பவங்களை கூறுகின்றதிறன் கருத்து எனக் கொள்ளப்படுகின்றது. பாத்திரங்களின் பேச்சிலிருந்தும் அரசியல் சொல்வன்மை எனும் கலைகளிலும் அப் பாத்திரங்கள் பெற்றிருக்கும் திறமை வெளிப்படும். இது அரசியல் சொல்வன்மை ஆகிய பிற கலைகளுடன் தொடர்புடையது.

அரங்கில் வரும் பாத்திரங்கள் வேறு, பாத்திரங்களின் பண்பு அல்லது குணம் என்பதுவேறு. நாடக மாற்றங்களின் எல்லாப் பேச்சுக்களும் அவருடைய பண்பு நலன்களை வெளிப்படுத்துவதில்லை. கருத்து அல்லது சிந்தனை என்பது இப்பண்பினின்று வேறுபட்டது. விவாதத்திற்குரிய ஒரு பொருள் உண்மையானதா, பொய்யானதா எனும் ஆய்வுப் பேச்சின்கண் வெளிப்படுவது கருத்து எனப்படும் அல்லது காலமும் களமும் கடந்து நிகழும் தன்மையுடைய பிரபஞ்சப் பொதுப் பொருள் சிந்தனைப் பேச்சின்வண்ணம் இக் கருத்து வெளிப்படும்.

இசை / பாடல்

கிரேக்க அரங்க மரபில் பாடல் முக்கியத்துவம் பெறுகிறது. இதனை அரிஸ்ரோட்டில் தெளிவாக எடுத்துக் கூறுகின்றார். இசையால் விளையும் இன்பம் அவல நாடகங்களில் விளையும் துணை இன்பங்களுள் சிறந்தது. ஒரு விடயத்தைப் பற்றி குறிப்புரையாக சொல்கின்றபோது பாடல் முக்கியம் பெறும். பாடலின் வலிமை நாடகத்தில் உன்னதமாக இருக்குமென்றால் ஒரு காட்சி நடந்து கொண்டிருக்கின்றபோது அல்லது நடக்கும் போது அந்த காட்சி பற்றி சொல்லப்படுகின்ற பாடல் அந்தக் காட்சி பற்றியதொரு அபிப்பிராயத்தை உருவாக்க உதவும். இந்நிலை பார்வையாளரது மனதைக் கவரும். அவலச்சுவையில் அரிஸ்ரோட்டில் பாடகர் குழுவாகிய 'கோரஸ்' ஐ பயன்படுத்தினார்.

**காட்சி**

நாடக அரங்கில் காட்சிப் படுத்தப்படும் எல்லாம் 'காட்சிகள்' அல்லது 'காண்பியங்கள்' எனக் கூறப்படுகின்றது. நாடகமானது காட்சிகளை முதன்மைப்படுத்திய கலை, கண்ணால் பார்க்கப்படும் கலை. காட்சிகள் இல்லாமல் நாடகங்களில்லை நடிகனோ, நடிகையோ கூட ஒரு காண்பியந்தான் நடிகனுடைய ஆடையணி, வேடப்புனைவு, அவர் பாவிக்கும் மேடைப் பொருட்கள் எல்லாமே காண்பியமாகவே கொள்ளப்படும். இக் காட்சி நாடகத்தின் சம்பவங்களுக்குரிய சூழலை தோற்றுவிப்பதோடு பார்ப்போரின் மனங்களிலும் அதனை ஏற்படுத்தும். நாடக இசையமைப்பாளனும் காட்சியமைப்பாளனும் தனித் தனியேயும் சேர்ந்தும் சம்பவச்சூழலைத் தோற்றுவிக்கலாம்.

பண்புகளை எடுத்துக் கூறல் (03 புள்ளிகள்) அவற்றை விளக்குதல் (03 புள்ளிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III.

- ❖ உணர்ச்சி வெளிக் கொணரப்படல் கதாசிஸ் என்பதைக் குறிப்பிடல்
- ❖ கதாசிஸ் பார்போரிடையே பயத்தினையும் கழிவிரக்கத்தையும் ஏற்படுத்துவதனுடாக தீர்வு ஏற்படுகிறது.
- ❖ மன நிம்மதி ஏற்பட்டு ஆத்ம திருப்தி கிடைக்கின்றது. நெஞ்சுப் பாரம் நீங்குவது போன்ற நிலை உருவாகின்றது. கிரேக்க துன்பியல் நாடகங்களைப் பார்ப்பதன் மூலம் இந்நிலை தோன்றும்.
- ❖ மனதிலே இருந்து நம்மை உறுத்திக் கொண்டு இருப்பவற்றை வெளிக்கொணர்வதற்கு திறஜெடி நாடகம் உதவுகிறது. நாடகத்தில் நிகழுகின்ற மோதுகை காரணமாக பார்ப்போரின் உணர்ச்சிகள் வெளிக் கொணரப்படுகின்றன. மேடையில் உள்ள பாத்திரத்திற்கு ஏற்படுகின்ற மனப்போராட்டங்கள், மனச்சிக்கல்கள், மனச்சங்கடங்கள் என்பவற்றைப் பார்த்து அவற்றோடு ஒன்றி நிற்பதன் மூலம் பார்போருக்கு தமது கஸ்ரங்கள் பற்றிய ஒரு தெம்பு ஏற்படுகின்றது. அப்பொழுது ஏதோ ஒன்றை அறிந்து விட்டது போன்றதோர் உணர்வு வரும். இதனையே அரிஸ்ரோட்டில் கதாசிஸ் என்கின்றார்.

(04 புள்ளிகள்)

3.

I.

- ❖ கிரேக்க அரங்க அறிமுகம்
- ❖ கிரேக்க அரங்கில் நாடகம் நிகழ்த்தப்படும் முறை (02 புள்ளிகள்)
- ❖ ஆற்றுகை முறைக்கு உதவுகின்ற கோரஸ், இசை, ஆடல், பாடல், வேடமுகம், காட்சியமைப்பு, அசைவு முறைகள், அரங்கப் பின்னணி, அரங்கப் பொறிகள் போன்றன கிரேக்க அரங்க கட்டிடத்தை அடிப்படையாகக் கொண்டு பார்ப்போர் விளக்கத்திற்கு துணை நிற்கும் முறையினைக் கூறல். (02 புள்ளிகள்)

II.

- ▪ பாரம்பரிய கூத்து நிகழ்த்தப்படும் இடம். சுற்றிவர பார்ப்போர் அமர்ந்திருந்து நிகழ்வுகளைப் பார்ப்பர்.
- ▪ அறிமுக விளக்கம். (01 புள்ளி)
- ▪ அளிக்கை செய்யப்படும் முறை (02 புள்ளிகள்)
- ▪ உடை, ஒப்பனை, ஆடல், பாடல், எடுத்துரைப்பு முறை
- ▪ பார்ப்போருக்கும் அரங்கிற்குமான தொடர்பு (அளிக்கை முறையுடன் நெருக்கமாக இணைந்திருத்தல்)

III.

- ❖ படச்சட்ட அரங்கின் அறிமுகம்
- ❖ இத்தாலியே இவ்வரங்கின் தாயகம்
- ❖ அளிக்கை முறை(அரங்க சாதனங்கள் பயன்படுத்தும் விதம்) (02 புள்ளிகள்)
- ❖ பார்ப்போருடனான உறவு (02 புள்ளிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவு B

4. (அ)

- சமஸ்கிருத செந்நெறி நாடக மரபு
- இலக்கண விதிகளுக்கு அமைய படைக்கப்படுவது. அதாவது நாட்டிய சாஸ்திர நாடக கட்டமைப்பினை பின்பற்றி உருவாக்கம் பெற்ற நாடக மரபு
- உயர்நிலை சமூகத்தினரை சித்திரிப்பதான படைப்பாகும்.
- சமஸ்கிருத அரங்கு குறிப்பிடும் 10 நாடக வகைகளும் இம்மரபைச் சார்ந்ததே.

(ஆ)

- பிரதேச தனித்துவங்களை வெளிப்படுத்திக் காட்டும் மரபு (மதம், மொழி, பண்பாடு, ஒப்பனை)
- இலக்கண விதிகள், மரபுகளுக்கு அப்பாற்பட்டது.
- இந்திய மாநில தனித்துவங்கள் வெளிப்படல். கேரளம்- கதகளி, தமிழ்நாடு- தெருக்கூத்து, ஆந்திரா- குச்சுப்புடி

III. பார்ப்போருக்கும் பங்கு கொள்வோருக்கும் இடையிலான வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டு அரங்க சாதனங்கள், அளிக்கை முறை வேறுபடும்

(08 புள்ளிகள்)

5.

I. நாடகம் நிகழ்த்திக் காட்டும் கலை, நிகழ்வுகளை எடுத்துக் கூற நடிகன் தேவை. நடிகனே நாடக எழுத்துப் பிரதிக்கு வடிவம் கொடுக்கின்றான். ஆதலால் நாடகம் நடிகனின் கலை என குறிப்பிடப்படுகிறது. நாடகப் பிரதிக்கு ஏற்ற வகையில் வேறுபட்ட நடிப்பு வெளிப்பாடுகளை நடிகன் வெளிப்படுத்துகின்றான்.

II. (அ)

❖ ரஸ்யா நாட்டைச் சேர்ந்த ஸ்ரனிஸ்லெவஸ்கியினால் முன்வைக்கப்பட்ட கோட்பாடே முறைமைக் கோட்பாடாகும்.

❖ உணர்வு சித்திரிப்புக்கு முதன்மை கொடுத்தல்.

❖ நடிகன் பாத்திரமாக அரங்கில் வாழ வேண்டும் என்பதும் பார்ப்போர் நிகழ்வுடன் ஒன்றிக்க வேண்டும் என்பதும் இவரது கருத்தாகும்.

❖ அகவயம் சார்ந்த வெளிப்பாட்டினை முன்வைக்க நடிகன் பெறும் பயிற்சி முறைகள்

- தளர்நிலை
- மனதை ஒருநிலைப்படுத்தல்
- உற்றுக்கவனித்தல்
- நம்பகமான பாத்திரங்களை உருவாக்கல்
- அவர் கூறும் 10 உளவியல் நுட்ப முறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ)

- ❖ ஜேர்மனிய நாடக தயாரிப்பாளரான பிர.்.க்ரினால் தோற்றுவிக்கப்பட்ட உத்தி முறையாகும்.
- ❖ செய்து காட்டலுக்கு முதன்மை கொடுத்தல்.
- ❖ பார்ப்போரைச் சிந்திக்க வைத்தல்.
- ❖ இவர் கையாண்ட நுட்ப முறைகள்
    - கதை கூறும் பண்பு
    - எடுத்துரைஞர் கையாள்கை
    - இடைவெட்டிய பாடல்
    - படர்க்கையில் சொல்லல்
    - குறியீட்டுக் கையாள்கை
    - அட்டைகளில் எழுதி தொங்கவிடல்

6.

I.

க- பாடல்

பு- ஆடல்

கி- நடிப்புத்திறன்

ஜப்பானில் 17 ஆம் நூற்றாண்டு உருவாக்கப் பெற்றது.

பெருங்காட்சித் தன்மை, மிகைப்பாட்டுத்தன்மை, பெரிய அரங்க நிர்மாணத்தன்மை

கபுக்கி அரங்கில் நிகழ்த்துகை, கனாமிச்சி பூம்பாதையின் சிறப்பு

சுழலும் மேடையின் பயன்பாடு

சிக்காமாட்சு சிறந்த நாடக ஆசிரியர்

II. பாவைகள் வெளிச்சத்தினுடாக நிழலை விழுத்தி நிழல்களை மக்கள் பார்த்து ரசிக்கும் கலை வடிவம்

பாடகர் குழுவின் பயன்பாடு, பின்னணி இசை,தனித்துவமான அரங்கு முதன்மை பெறும்.

இந்தோனேசியா, இந்தியா,இலங்கை போன்ற நாடுகளில் நிகழ்த்தப்பட்டு வருகிறது.

.III.

- குரல் ஒலியின் ஊடாக பாத்திர உணர்வு, சம்பவங்களை விளக்கிக் கொள்ளும் நாடக வகையாகும்.
- கேட்டலைப் பிரதானப்படுத்தியது.
- மனதினை மேடையாகக் கொண்டு நிகழ்வுகளைக் கற்பனை செய்து அறிய வேண்டும்
- ஒரு நடிகனே பல பாத்திரங்களுக்கு ஏற்றவகையில் தன்னை மாற்றிக் கொள்ளலாம்.
- நேரடித் தொடர்பு இல்லை.
- ஒளி. ஒப்பனை, காட்சிவிதானிப்பு போன்ற சாதனங்களின் பயன்பாடு இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IV

- நாடகத்தின் உட்பொருளை அறிந்து கொள்வதற்கு அபிநயங்கள் உதவுகின்றன.
- ஆங்கிக அபிநயம் - உடல் வழிச் சித்திரிப்பு
- வாச்சிக அபிநயம் - குரல் வழிச் சித்திரிப்பு
- ஆஹார்ய அபிநயம் - காண்பிய வழிச் சித்திரிப்பு
- சாத்விக அபிநயம் - உணர்வு வழிச் சித்திரிப்பு

ஒவ்வொரு வகை அபிநயங்களையும் விளக்க வேண்டும்.

V

- கேரளா மாநிலத்திற்குரிய கலை வடிவம்
- உடல் அசைவுகள் முதன்மையானதாகும்.
- இசை, நடனம், நடிப்பு இணைந்த வெளிப்பாடாக அமையும்.
- கதகளியின் ஒப்பனை, வர்ணத்தேர்வு பாத்திரங்களுக்கு ஏற்ப வேறுபடும்
- ஆகார்ய அபிநயத்தின் பயன்பாடே மேலோங்கி இருக்கும்

**நாடகமும் அரங்கியலும் II** 2011 ஓகஸ்ற்

பகுதி-I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 5 | 11. | 2 | 21. | 3 | 31. | 1 |
| 2. | 3 | 12. | 3 | 22. | 4 | 32. | 4 |
| 3. | 2 | 13. | 3 | 23. | 4 | 33. | 2 |
| 4. | 4 | 14. | 3 | 24. | 4 | 34. | 4 |
| 5. | 3 | 15. | 3 | 25. | 4 | 35. | 4 |
| 6. | 1 | 16. | 3 | 26. | 5 | 36. | 1 |
| 7. | 5 | 17. | 2 | 27. | 4 | 37. | 2 |
| 8. | 5 | 18. | 1 | 28. | 4 | 38. | 3 |
| 9. | 5 | 19. | 2 | 29. | 2 | 39. | 5 |
| 10. | 4 | 20. | 2 | 30. | 2 | 40. | 4 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி-II

I. பாத்திர செயல்கள் ஊடாகவும் இவர்களுக்கிடையிலான மோதுகைகள், உரையாடல்கள், செயல்கள் என்பவற்றுக்கூடாகவும் அவலம் வளர்த்தெடுக்கப்படுகிறது.

விளக்கம் -

- அன்ரிக்கனி- கிறையோன்
- கிறையோன்- ஏமன்
- தெய்ரீசியஸ்- கிறையோன்
- அன்ரிக்கனி தனித்து நிற்பதும் கிறையோன் மகனைப் பிரிவதும் மாமன் மருமகளுக்கிடையிலான மோதுகைக் கட்டம் முதன்மை பெறுதல் (உணர்வு). அன்ரிக்கனி கற்பாறைக்குள் வைத்துக் கட்டப்படுதல். அன்ரிக்கனி, கிறையோன் ஆகியோரின் தோற்றுப் போகும் கட்டம். பயம் எவ்வாறு கூடுகிறது பின் அப்பயம் தீர்க்கப்படுகிறது. பாத்திரத்தின் மீது பரிவும் கழிவிரக்கமும் ஏற்படல்.

**சொல்- செயல்- நிகழ்வுகளையும் எழுத்துருக்களுடாக விளக்குதல் எதிர்பாக்கப்படுகிறது. (8 புள்ளிகள்)**

II. **வேடப்புனைவு என்பது**

**திட்டமிடும் பொழுது**

- எழுத்துரு ( அன்ரிக்கனி பாத்திரத்தின் தன்மை)
- பாத்திரத்தின் தோற்றப்பாடு
- எழுத்துரு கூறும் காலகட்டம், பின்னணிப் பண்பாடு
- பாத்திரத்தின் அசைவு
- மேடை, அரங்கின் தன்மை

**மேற்குறித்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஒப்பனையைத் திட்டமிடவேண்டும்.**

- **வேடஉடை அணிகள் திட்டமிடப்படும் பொழுது மேலே குறித்த விடயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்**

உ-ம் கிரேக்க நடிகர்கள் தலைக்கவசம், தொப்பி அணிதல், பாதம் உயர்ந்த நீண்ட சப்பாத்துக்கள் அணிந்து வருதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

▪ அணிகலன்கள் எனும்போது வேடமுகம் அணிதல் மிக முக்கியம் பெறுகிறது. வேடமுகங்கள் விகாரப்படுத்தப்பட்டதாகவும் பல்வேறு உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடியதாகவும் இருத்தல்.
(04 புள்ளிகள்)

▪ கிரேக்க பண்பாட்டை வெளிப்படுத்தப்படுவதாகவோ அல்லது நாடக எழுத்துருவினை வியாக்கியானிப்பதனூடாகவோ இதற்கான விடையினை அளித்தல்.

உ-ம் அரண்மனைப் பின்புலம், கல்லறைப் பின்புலம் (03 புள்ளிகள்)

2.

I. மனிதன் மனிதனுக்குள்ளும், தனக்குள்ளும் பிறருக்குள்ளும் மோதுகையே இந்நாடகத்தில் காட்டப்படுகிறது. இந்த மோதுகைக்கு பிரதான காரணம் 'சந்தேகம்'. இரண்டு குணாம்சங்களைக் கொண்ட இரண்டு மனிதர்களுக்கிடையேயான மோதுகை இங்கு காட்டப்படுகிறது.

ஒதெல்லோவிடம் காணப்படுகின்ற சந்தேகம்.

II.

இந்த மோதுகையானது பல்வேறு கட்டங்களில் ஏற்படுவதை அல்லது வெளிப்படுவதை நாடக எழுத்துருவினை மையமாகக் கொண்டு விளக்குவர்.

உ-ம்

❖ ஒதெல்லோவும் டெஸ்ரிமோனாவும் இரகசியமாகத் திருமணம் முடித்து விட்டார்கள். எனும் செய்தியை இயாகோவும் ரோடறிக்கோவும் பிரபான்சியோவின் வீட்டில் முன்பாக வெளிப்படுத்தும் சந்தர்ப்பம்.

❖ கைக்குட்டை கஸ்சியோவின் அறையில் இருத்தல் என்ற கட்டத்தில்

கஸ்சியோவின் பதவியினை மீளவும் வழங்குமாறு ஒதெல்லோவிடம் டெஸ்ரிமோனா கேட்கும் கட்டம் . (03 புள்ளிகள்)

III. பாத்திரங்களைக் குறிப்பிட்டு, அவர்கள் கூறிய கூற்றுக்களை குறிப்பிடுதல் வேண்டும்.

இயாகோ- வெள்ளாட்டைக் கறுத்தக்கடா இழுத்துக் கொண்டு ஓடிவிட்டது.

ஒதெல்லோ- காஸியோ அவளை இச்சித்தான் உன் கணவனைக் கேட்டுப்பார்.

அவளை நான் கொன்றதற்குத் தக்க காரணம் இல்லாவிட்டால்

நான் ஆழ்நகரத்தில் அல்லற்படுவேன் எல்லாம் உன் கணவனுக்குத் தெரியும்.

(05 புள்ளிகள்)

3.

I. இயல்புக்கு ஒத்துவராத அல்லது தொடர்பற்றதாக அல்லது கருத்தற்றதாக அல்லது பொருத்தமற்றதாக அமையும் நிகழ்ச்சிகள், சம்பவங்கள்,சொற்கள் என்பவற்றை அபத்தம் எனச் சொல்கிறோம். (03 புள்ளிகள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II. அபத்த நாடகம் என்பது,

நிலவிவந்த பாரம்பரியத்திலிருந்து இந்த நாடகம் எடுத்துக் கூறும் முறையிலும் விடயத்திலும் எவ்வாறு வேறுபடுகிறது என்பதை விளக்கவேண்டும்.

உ-ம்

வாழ்வின் அர்த்தமின்மைகளை எடுத்துக் கூறுதல்

மரபு வேறுபாடுகள்

மொழிக் கையாள்கை

அளிக்கை முறைமை

பாத்திர உருவாக்கம் முக்கியப்படுத்தப்படாமை

பாத்திரம் எனும் எண்ணக்கரு கையாளப்படும் முறைமை. (05 புள்ளிகள்)

III. நா. சுந்தரலிங்கம் அவர்களது அபசுரம் நாடகத்தில் காணப்படும் அபத்த நிகழ்ச்சிகள், அவற்றின் மூலம்தெரிய வரும் மனித சமுதாயத்தின் அம்சங்களைக் குறிப்பிட்டு விளக்குதல் வேண்டும்.

உ-ம்

காற்றாடி சுற்றுவது, பேப்பர் பறப்பது, அதற்காக பொதுவர் முயற்சிப்பது,அவரது செயல்கள் பயனற்றுப் போவது

பேராசிரியர் அளத்தல் (07 புள்ளிகள்)

4.

I. ஈஸ்கலஸ்

- கி.மு 525- 456 வரை வாழ்ந்தவர்.
- கிரேக்கத்தின் ஆரம்ப கால அவலச்சுவை நாடகாசிரியர்
- டயோனிசியஸ் நாடக விழாப் போட்டியில் கலந்து கொண்டு பரிசில்களைப் பெற்றவர்.
- நாட்டுப்பற்றுடைய ஒருவராகவும் போர் வீரராகவும் பணி செய்தவர்.
- 90 நாடகங்கள் வரை எழுதியவர். த பேர்சியன்ஸ்., கெவின் எகெயின்ஸ் தீபீஸ், ஓரெஸ்ரியா
- ஒரே ஐதீக கதையைக் கொண்ட முக்கூட்டு நாடகத் தொகுதியில் அக்கறை கொண்டவர். உ-ம் ஒறெஸ்ரியா
- இவரது நாடகப் படைப்புக்கள் பல்திறன்களைக் கொண்டவை.
- கிரேக்க திறஜெடியின் புற இயல்புகளை இவர் தனித்து தோற்றுவித்தார்.
- தெய்வங்களுக்கும் மனிதருக்குமான தொடர்பைக் கூறுவதில் நம்பிக்கை கொண்டிருந்தார்.
- மனிதனையும் விதியையும் பிரிக்கமுடியாது என்ற கருத்தினை முன் நிறுத்தியவர்.
- இரண்டாவது நடிகனைத் தோற்றுவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ வெறும் இசைப்பாடலாக இருந்த பகட்டான உரையாடலை நாடகப் பண்புடையதாக்கினார். (06 புள்ளிகள்)

II. சோபோக்கிளிஸ்

❖ இவர் கி.மு 486-406 வரை வாழ்ந்தவர்.

❖ கிரேக்கத்தின் மிக புகழ் பெற்ற அவலச்சுவை நாடகாசிரியராவார்.

❖ 100 நாடகங்களுக்கு மேல் எழுதியுள்ளார்.

❖ அன்ரிக்கனி, ஈடிப்பஸ் மிகப் பிரசித்தமான நாடகங்கள்.

பிலோக்ரெற்றாஸ், எலெக்ரா முதலிய நாடகங்களையும் எழுதினார்.

❖ மூன்று நாடகத்தொகுதியாக இருந்த திறஜெடி நாடகத்தை தனியொரு நாடகமாக எழுதும் முறைமையைத் தொடக்கி வைத்தார்.

❖ நாடகத்தின் அமைப்பை பொறுத்தவரையில் அவலத்தினுடைய தாங்க முடியாத சோகங்களை வெளிப்படுத்துவதில் கைகோர்த்தார்.

❖ அரிஸ்ரோட்டில் திறஜெடி பற்றிக் கூறியவை சோபோக்கிளிசினுடைய நாடகங்களை அடிப்படையாக வைத்தே எழுதப்பட்டன எனக் கூறுவர்.

(05 புள்ளிகள்)

III. அரிஸ்ரோபன்ஸ்

❖ இவர் கிரேக்க மகிழ்நெறி நாடகாசிரியர் ஆவார்.

❖ ஏதென்ஸில் பொற்காலத்தின் இறுதியில் வாழ்ந்தவர்.

❖ இவரது மகிழ்நெறி நாடகங்கள் வினோதம், பாலியல்,தூசணை, அங்கதம், இசைப்பா, அழகு, என்பன கலந்தவையாக உள்ளன.

❖ விபரீதங்களும், கொச்சைத்தனமும், குத்தல் நிறைந்த கேலியும், கவித்துவமும் கலந்திருந்தன. அவற்றில் கற்பனை நிறைந்த விடயங்கள் மக்கள் மத்தியில் பேசப்படும் சமகால விடயங்கள் நாளாந்த நிகழ்வுகளுடன் கலந்து கூறப்படுகின்றன.

❖ உயர்ந்த தத்துவ நோக்குகள் என்பன மிகவும் மட்டமான நிலையில் வைத்து கேலியும் கிண்டலும் செய்யப்படும்.

❖ இவர் 44 மகிழ்நெறி நாடகங்களை எழுதியதாகக் கூறப்படுகின்றது.

❖ 11 நாடகங்களே இன்று கிடைக்கப் பெற்றுள்ளன.

❖ டேயிற்றேல்ஸ்,பவிலோனியன்ஸ், த அச்சானியன்ஸ், த நயிட்ஸ், த குழூட்ஸ், த வாவ்ஸ், த பீஸ், த பேட்ஸ், த லசிற்றேற்றா, எச்சிக்கினேசியா,

❖ அரசியல், யுத்தம், கல்வி, இலக்கியம் பற்றியும் எழுதினார். (5புள்ளிகள்)

❖ கூட்டுச் சமூக அமைப்பிலிருந்து தனிமனித சமூக முரண்பாடுகள் அதிகரிக்க பாத்திர வளர்ச்சியும் அவர்களுக்கிடையிலான முரண்பாடுகளும் நடிப்பியலாகவும் அரங்கியல் பண்பு கொண்டவையாகவும் வளர்ச்சி பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ வாழ்க்கையைப் பார்க்கும் முறையில் அவலமும், இன்பியலும் வந்து சேரும் முறைமை.

❖ இதுவே கிரேக்க அரங்கில் ஒட்டுமொத்த வளர்ச்சி எனப் பார்க்கப்படும்.4.

5. I. கணபதிப்பிள்ளை

❖ இவர் ஒரு யதார்த்த நாடகாசிரியர்.

❖ இவருடைய நாடகங்கள் 10 உண்டு. உடையார் மிடுக்கு, முருகன் திருகுதாளம், கண்ணன் கூத்து, நாட்டவன் நகர வாழ்க்கை, பொருளோ பொருள், தவறான எண்ணம், சுந்தரம் எங்கே, துரோகிகள், மாணிக்கமாலை, (தழுவல் நாடகம்)

சங்கிலி (வரலாற்று நாடகம்)

❖ சமூகத்தின் நடப்பியலை தமது நாடகங்களில் கொண்டு வந்ததமை.

❖ யாழ்ப்பாணச் சமூகத்தின் பிரச்சினைகள் குடும்பங்களின் மேனிலையாக்கம்,

உ-ம் சீதனம், சாதி, கலியாணம், நகர வாழ்வின் பிரச்சினைகள்.

❖ யாழ்ப்பாணத்தின் மண்வாசனை ததும்பிய பேச்சு வழக்கினை தமது நாடகங்களில் கொண்டு வந்தமை.

❖ கற்பனைலோகத்தின் கதையிலிருந்து நடப்பியல் உலகத்திற்குக் கொண்டு வந்தமை.

(உடையார், மணியகாரன், சுந்தரம், கண்ணன் பாத்திரங்கள்) (03 புள்ளிகள்)

II. சு. வித்தியானந்தன்

❖ கூத்து மீள் கண்டுபிடிப்புக்களைச் செய்தவர்

❖ பேராதனைப் பல்கலைக் கழகத்தையும் இதன் மாணவர்களையும் தளமாகக் கொண்டு மீளுருவாக்கம் செய்து படச்சட்டமேடைக்கு கொண்டு வந்தமை.

இராவணேசன், வாலிவதை, கர்ணன் போர், நொண்டி நாடகம்

❖ விடிய விடிய ஆடப்பட்ட கூத்துக்கள் 3 மணித்தியாலங்கள், 1½ மணித்தியாலங்களாக சுருக்கி ஆடவைத்தமை.

❖ அண்ணாவிமார் மகாநாடுகளை நடத்தி அவர்களை கௌரவித்தமை. (03 புள்ளிகள்)

III. நா. சுந்தரலிங்கம்

❖ இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நடிகராகவும், நெறியாளராகவும், நாடகாசிரியராகவும், ஒப்பனையாளராகவும் பணிபுரிந்தார்.

❖ நடிகர் ஒன்றியத்துக்காகத் தமது படைப்புக்களை கொண்டு வந்தமை.

❖ அபசுரம்- அபத்தவகை நாடகம்

❖ விழிப்பு- ஒயிலாக்க நாடகம் / மோடியுற்ற நாடகம்

❖ முருகையனின் கடூழியத்தை நெறிப்படுத்தியமை

❖ இருதுயரங்கள் நாடகத்தை நெறிப்படுத்தியமை. (03 புள்ளிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IV. சி. மௌனகுரு

- ❖ இவர் நடிகராக, எழுத்தாளராக, ஆய்வாளராக, விமர்சகராக, அரங்கில் பணியாற்றி வருபவர்.
- ❖ வித்தியானந்தன் தயாரித்த கூத்துக்களில் நடித்தவர். (இராவணேசன்)
- ❖ சங்காரம், சக்தி பிறக்குது, மழை, நம்மைப் பிடித்த பிசாசு, வேடனை உச்சிய வெள்ளைப்புறா, தப்பி வந்த தாடிஆடு, சுத்தமாகுவோம் சுத்தமாக்குவோம் முதலிய பல நாடகங்களை எழுதியுள்ளார்.
- ❖ இவரது மிகப் பிரபல்யம் வாய்ந்த நாடகத் தயாரிப்பாக இராவணேசன் விளங்குகிறது.
- ❖ கூத்தை அடிப்படையாகக் கொண்டு புதிய நாடகங்களை உருவாக்கினார்.

(03 புள்ளிகள்)

V. குழந்தை. ம. சண்முகலிங்கம்

- ❖ இவர் நடிகராக, எழுத்தாளராக, ஆய்வாளராக, விமர்சகராக, போதனாசிரியராக, அரங்கில் பணிபுரிந்து வருகிறார்.
- ❖ 100 க்கு மேற்பட்ட நாடகங்களை எழுதியவர்.
- ❖ நவீன தமிழ் நாடகாசிரியராக பணிபுரிந்து வரும் இவர் பாடசாலை நாடகங்கள், சிறுவர் நாடகங்கள், சமூக பிரக்ஞை மிக்க நாடகங்கள் பலவற்றை எழுதினார்..
- ❖ புதுமை அரங்கினை கல்வி அரங்க செயற்பாடுகள் ஊடாக முன் கொண்டு வந்தார்.
- ❖ மண்சுமந்த மேனியர், அன்னையிட்டதீ, எந்தையும் தாயும், கூடி விளையாடுபாப்பா, ஆர்கொலோசதுரர் (03 புள்ளிகள்)

**6. சீன யப்பானிய அரங்க மரபுகளில் காணப்பெறும் அளிக்கை முறைமைகள்**

சீனா – ஒபேறா

யப்பான் - கபுக்கி, நோ, புன்றகு, கியோஜின், கொவாக்கா

ஆடல், பாடல் உடல் சாகச விளையாட்டுக்கள், வர்ணம், இசை, அசைவுகள், முதலானவை இடம்பெறும்.

வேடமுகங்களின் பயன்பாடு.

பெருங்காட்சிப் பண்பு கொண்ட அளிக்கை முறை

ஆடைஅணிகலன்கள் மூலமாக நாடகத்தில் பழைய சமூகத்தை வெளிப்படுத்தும் விதத்தில் இயல்பாகக் காட்சிகள் அமைக்கப்படும்.

கொண்டை அலங்காரங்கள், அடி உயர்ந்த பாத அணிகள் பயன்படுத்தப்படல்.

மேடை அலங்காரம் ஒரு கட்டாய இலட்சினை

உடல் அசைவுகளுக்கு 115 பாணிகள் பயன்படுத்தப்பட்டன.

வர்ணங்களால் பல்வேறு பாவங்களை வெளிப்படுத்தினார். (15 புள்ளிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிங்கள நாடக உலகிற்கு சரத்சந்திரா ஆற்றிய பணிகள்**

இவரது நாடகத் தயாரிப்புக்கள் மூலம் ஏற்படுத்திய மாற்றம்.

மனமே, சிங்கபாகு, முதலான நாடகத் தயாரிப்புக்கள் மூலம் சிங்கள நாடக உலகிற்கு ஒரு புதிய வடிவத்தை வழங்கினார்

இவர் ஒரு கலைஞர், எழுத்தாளர், ஆய்வாளராக கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டார்.

பல்வேறு நாடக உத்திகளைக் கையாணாண்டார்.

கோலம- மனமே

நூர்த்தி

நாடகம முதலான தயாரிப்புக்கள் முக்கியம் பெற்றமை.

தழுவல் நாடகங்கள் பலவற்றைப் படைத்தமை.

தேசிய நாடகம் என்ற கருத்தாடலுக்கு வழிவகித்தமை.

தேசிய அரங்கு ஒன்றை உருவாக்கும் சிந்தனையாளராக விளங்கினார்.

சிங்களப் பாரம்பரிய அளிக்கை, தமிழ் பாரம்பரிய அளிக்கை, தென் இந்திய பாரம்பரிய அளிக்கை, யப்பான் சீனா அளிக்கை முறைமைகளை இணைத்து தேசிய நாடக அரங்கினை உருவாக்கினார் என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். (15 புள்ளிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நாடக மன்றங்கள் | ஸ்தாபகர்கள் |
| --- | --- |
| போய்ஸ் கம்பனி | சங்கரதாஸ் சுவாமிகள் |
| சுகுணவிலாச சபை | பம்மல் சம்பந்த முதலியார் |
| நாடக அரங்கக் கல்லூரி | ம.சண்முகலிங்கம் |
| திருமறைக் கலாமன்றம் | அருட்தந்தை மரியசேவியர் அடிகளார் |
| அரங்க செயற்பாட்டுக் குழு | க.சிதம்பரநாதன் |
| செயல்த்திறன் அரங்க இயக்கம் | தே.தேவானந்த் |
| மக்கள் களரி (ஜன கறலிய) | பராக்கிரம நீரியல்ல |
| அபினா கலைக்குழு | அனோஜா வீரசிங்க |
| ஆழி நாடகக் குழு | வேலு.சரவணன் |
| நிஜ நாடக இயக்கம் | மு.ராமசுவாமி |
| கூத்துப் பட்டறை | நா.முத்துச்சாமி |
| சென்னைக் கலைக்குழு | பிரளயன் |
| தன்னானே கலைக்குழு | ஏ.ஜே.குணசேகரன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org